பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 24 புதன்கிழமை (08.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 20

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## அதியுயர் பாதுகாப்பு வலயம்

# மீளக்குடியமர்தலில் அரசு-புலிகள் இணக்கம்!

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(பாங்கொக்கில் இருந்து அன்ரனிஜீவா)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில்,அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடிமர்த்துவது தொடர்பாக அரசும் விடுதலைப் புலிகளும் பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதலாம் சுற்றின் நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின், இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று தாய்லாந்தின் நொக்கம் பத்தோம் நகரிலுள்ள ''றோஸ்.கார்டின் ரிசோர்ட்'' ஹோட்டலில் காலை மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்றன.

சுமார் ஐந்து மணித்தியாலங்கள் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளுக்கும் படைத் தரப்புக்கும் இடையில் அதிருப்தியை யேற்படுத்திய,மிகவும் சர்ச்சைக்குரிய அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

தமிழ் மக்கள் தமது தாயகப் பிரதேசத்தில்,தமது சொந்த இடங்களில்

(10ம் பக்கம் பார்க்க)



### அரசு-புலிகள் தரப்பு பிரதிநிதிகள் ''மெட்டல் ''கருவி மூலம் சோதனை

(பாங்கொங்)

அரசாங்கத்திற்கும தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேற்றைய பேச்சுக்களுக்கு முன்னதாக இரு தரப்பு பிரதிநிதி களும் மெட்டல் டிரக்டர் கருவி மூலம் சோதனைக்குள்ளாக்கப்பட்டே பேச்சுவார்த்தை நடைபெறும் ''றோஸ் கார்டியன் ரிசோர்ட்'' ஹோட்டலுககுள் அனுமதிக்கப்பட்டனர்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காககவே இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தனிநாடு அமைப்பதை எம்மால் பொறுக்க முடியாது!

(கொழும்பு) —பிக்குமார் முன்னணி ஆதங்கம் —

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம், புலிகள் தனி நாடு ஒன்றை அமைப்பதற்கான அடித்தளத்தை செய்து கொடுத்திருக்கிறது. விடுதலைப் புலிகள்தனிநாடு அமைக்கும் நிலை உருவாகுவதை எம்மால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு ''நாட்டைப் பாதுகாக்கும் பிக்குமார் முன்னணி'' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டுக்கு எப்போதெல்லாம்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - செஞ்சிலுவை பிரதிநிதிகள் நேற்று சந்தித்துப் பேசினர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும்,விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்குமிடையில் நேற்று சந்திப்பொன்று இடம் பெற்றது.

யாழ்மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில்,உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக,யாழ். குடாநாட்டு இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் விடுக்கப்பட்ட அறிக்கை குறித்து யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்

(10ம் பக்கம் பார்க்க)

## இராணுவ மேலாதிக்கத்தைத் தடுக்க பாதுகாப்பு உபகுழு கலைக்கப்பட்டது

(பாங்கொக்)

பாதுகாப்பு விடயங்களைக் கையாளுவதற்காக அமைக்கப்பட்ட ''பாதுகாப்பு உபகுழு''அரச,புலிகள் இணக் உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

பாதுகாப்பு உபகுழு பலதட்வைகள கூடிய போதும் அவற்றினால் எந்தத் தீர்மானங்களும் நடைமுறைப உபகுழுவில் இராணுவ மேலாதிக்கம் அதிகரித்து வருவதனால் எழக்கூடிய சிக்கல்கள் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளால் சுட்டிக்

## பருத்தித்துறை துறை முகத்தில் பாரவூர்தி சங்கம் மறியல்

(பருத்தித்துறை)

பட்ட இம் மறியல் போராட்டத்தினால்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறை முகத்தில் கப்பலில் இருந்து பொருட்களை லொறிகளில் ஏற்றுவதில் இடம் பெற்ற முறைகேட்டைக் கண்டித்து,நேற்று துறை முகப்பகுதியில் மறியல் போராட்டம் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்திச் சஙக உறுப்பினர்களால் மேற் கொள்ளப்பட்ட இம் மறியல் போராட்டத்தினால் துறைமுகப்பகுதிச் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பித்தன.

யாழ.மாவட்ட தனியார் பாரவூர்திச் சங்கத்தைச சேர்ந்த லொறிகளிலேயே கப்பலில் இருந்து பொருட்கள் ஏற்றிச் செல்லப்படுவது வழமையாகும்

(10ம் பக்கம் பார்க்க)

# யப்பானிய அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

யப்பானிய வெளிநாட்டு அமைச்சர் ஹிறிட்கோஜவா ஜிச்ஷி நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி சந்திாகா குமாரதுங்காவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்து கொண்டார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மற்றும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சியில பொது ஜன ஐக்கிய முன்னணியினதும்.

(10ம் பக்கம் பார்க்க)

ளுவதற்காக அமைககபபடட "பாதுகாப்பு உபகுழு"அரச,புலிகள் இணக்கப்பாட்டுடன் நேற்றுக் கலைக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது புனரமைப்பு,பாதுகாப்பு ஆகிய கூடிய போதும் அவற்றினால் எந்தத் தீர்மானங்களும் நடைமுறைப படுத்தவில்லை. இந்த நிலையில் பாதுகாப்பு உபகுழுவைக் கலைப்பதற்கு இருதரப்பினரும் இணக்கம் கண்டனர்..

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட ... தரப்புப் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

புனரமைப்பு உபகுழு விடுதலைப புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் தொடர்ந்து இயங்கவுள்ளது. (த)

# உயர் பாதுகாப்பு வலயம் குறித்து இன்றும் நாளையும் ஆராயப்படும்

## அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

(பாங்கொக்)

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துதல்,மற்றும் மீளக்குடியமாவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகிய விடயங்கள் நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் இறுதி இரண்டு நாட்களிலும் ஆராயப்படவுள்ளன.

இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். நேற்றையதினம் இடம்பெற்ற அரசு-புலிகளுக்கிடையிலான நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் நாள் நிறைவில் இடம்பெற்ற

(10ம் பக்கம் பார்க்க)

# அமெ.தூதுவருடன் டக்ளஸ் சந்திப்பு

(கொழும்பு)

ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்த நேற்றுக் காலை அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில்ஸைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பின் போது வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நிலவும் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி
வாரத்தில் ஆறு நாட்கள் சனிக்கிழமை உட்பட

ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194
[C/5501]

### சிறு விளம்பரம்

**A|L 2005**

A|L 2005 Batch இற்கான General English வகுப்புகள் ஆரம்பம்: 8-1-2003 புதன் மாலை 4-00 மணி. அனுமதிக்கு பெற்றார் வருகை அவசியம், தொடர்பு கோ. சுப்பிரமணியம் 62. பழம் றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (6431)

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் கையளவுகொண்ட பிளாஸ்டிக்காலான வாட்டர்பம், ஜெனரேட்டர் போன்றவைக்குரிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதல் திருத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு- நாராயணசாமி, 301, கஸ்தூரியார்வீதி, கன்னாதிட்டிச் சந்திக்கருகில் மேல்மாடி யாழ்ப்பாணம் (6246)

### விற்பனைக்கு

CG 125 (யப்பான்)மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு S, P. O, என்ரபிறைசஸ், 110 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், (சி 5608)

## பாதுகாப்பை உறுதி செய்யக்கோரி
# கிழக்கு முஸ்லிம்கள் நேற்று அமைதிப் பேரணி நடத்தினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை ஓட்டமாவடிப் பிரதேச முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்யப்பட வேண்டுமெனக் கோரி அப்பகுதி முஸ்லிம்கள் நேற்று அமைதிப்பேரணி ஒன்றை நடத்தினர்.

கல்குடாத்தொகுதி முஸ்லிம் மக்கள் முன்னணியால் மேற்கொள்ளப்பட்ட இப்பேரணி ஓட்டமாவடி பெரிய பள்ளி வாசலிலிருந்து புறப்பட்டு ஓட்டமாவடி பாலச்சந்தியைச் சென்றடைந்து அங்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், எதிர்காலத்தில் முஸ்லிம்களின் மீதான வன்முறைகள் இடம் பெறாமல் தடுத்தல் மற்றும்கடந்தமாதம் 2ம் திகதி இரவு அப்துல் அஜித் என்ற வாலிபர்கொலை செய்யப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஆட்டோச்சாரதியான எம். எச். முகமது உசைன்கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பான பின்னணிகள் கண்டறியப்பட்டு தொடர்புடையவர்கள் மீதுநடவடிக்கை எடுத்தல் வேண்டும் போன்ற விடயங்கள் உள்ளடக்கிய மகஜர் ஒன்று அங்கு சென்றிருந்த வாழைச்சேனை பிரதேச சட்டளை அதிகாரி சேனல் ஜே. பத்திரானாவிடம் கையளிக்கப்பட்டது

மீண்டும் அப்பேரணி அங்கிருந்து புறப்பட்டு மாவடிச் சேனைச்சந்தியை சென்று முடிவடைந்தது.

அங்கு ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கான மகஜர்கள் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் எச். எல். யமால்டினிடம் கையளிக்கப்பட்டன,

இப்பேரணியில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், (ந-5)

## பதிவுகளை மேற்கொள்க

(ஈச்சமோட்டை)

ஜே-66 கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களை நாளை காலை 9,30 மணிக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் அறிவித்துள்ளார், (உ 59)

## பெண்ணுக்கு 6 மாத சிறை

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருளான கோடா விற்பனை செய்த பெண் ஒருவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் நேற்று 6மாத கடூழியச்சிறைத்தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தது,

ஆனைக்கோட்டை 3ம் கட்டைப்பகுதியில் 175 கிராம் கோடாவை வைத்திருந்ததாலேயே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இப் பெண் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து 25 ஆயிரம் ரூபாவைசெலுத்துமபடிநீதிவான்உத்தரவிட்டார் எனினும் குறிப்பிட்டகாலத்திற்குள் கட்டத்தவறியமையினாலேயே இவருக்கு 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையை நீதிமன்றம் வழங்கியது. (ந-6)

### கட்டாக்காலி நாய் இன்று பிடிகக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இன்று காலை 7.30 மணி முதல் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சந்தை. ஆடியபாதம் வீதி பாடசாலை வீதி' அம்பாள் வீதி, பிள்ளையார்வீதி, பலாலி வீதி ஆகிய பகுதிகளிலேயே நாய்களை பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகடுகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார். (இ-5)

### கிணற்றில் விழ்ந்து முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

முதியவர் ஒருவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து மரணமானார்.

ஆனைக்கோட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பு தம்பிப்பிள்ளை (வயது 60) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-6)

### பாதுகாவலர் சங்கம் பிரதமரின் செயலரை இன்று சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் தமது பிள்ளைகளின் நிலை தொடர்பில் இன்று பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்துப் பேசவுள்ளது

மேற்படி சந்திப்புக்கு ஏற்பாடு செய்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதனும் இதில் கலந்து கொள்ளவுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இலங்கையின்இனவிவகாரம்குறித்துஆராய
# யப்பானிய வெளிநாட்டமைச்சர் நேற்று இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் ஜப்பானுக்கு இருக்கும் ஈடுபாட்டையும், அக்கறையையும் இந்தியாவுக்கு தெளிவுபடுத்த ஜப்பானிய அரசு முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் இந்திய அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கும் ஜப்பானிய அரசின் முடிவை தெரிவிப்பதற்குமாக ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் ஹிறிட்கோ ஜவாஜிற்ஷி நேற்று புதுடில்லிக்குச் சென்றுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் கருத்து மிகவும் முக்கியத்துவமானதாகும் இந்நிலையில் இந்திய அரசின் கருத்துக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் கருத்தைக் கேட்பதுடன் ஜப்பானிய அரசு இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறைகொண்டுள்ளதென்பதையும் தெளிவுபடுத்துவதே இந்திய விஜயத்தின் நோக்கமென்று ஜப்பானிய வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

இந்தியாவுக்குச் சென்றுள்ள ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் அங்கு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பே மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜத்வந்சிங்கா ஆகியோரைச்சந்தித்து இலங்கையின் இனவிவகார நிலைப்பாடு குறித்துபேச்சு நடத்த திட்டமிட்டுள்ளார். (இ)

## மீள்நியமன ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்பிரிவின் கீழுள்ள வைத்திய சாலைகளில் மருத்துவ, துணை மருத்துவ சேவையில் பயிற்றப்பட்ட ஆளணியினர் நிரப்பப்படாத வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனத்தில் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், பல்வைத்திய நிபுணத்துவ உத்தியோகத்தர்கள், பல்வைத்திய உத்தியோகத்தர்கள், பதிவு வைத்திய உத்தியோகத்தர்கள், பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஊடுகதிர் படப்பிடிப்பாளர்கள், மருந்தாளர்கள், ஆய்வுகூட தொழிநுட்பஉத்தியோகத்தர்கள் மருந்துக்கலவையாளர்கள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் உரியஆவணங்களுடன் சுகாதாரசேவைகள் மாகாணப் பணிப்பாளர் யாழ்ப்பாண ஊடாக செயலாளர் சுகாதார அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணம் திருகோணமலை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். (ந-5)

## தங்க விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்க விருதுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய ரீதியில் இலங்கையின் முன்னேற்றத்திற்குப் பங்காற்றிய வகையில் விஞ்ஞானத்துறை சார்ந்த குறிப்பிடத்தக்கதான ஆய்வுப் பணிக்காக இவ் விருது வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் பேராசிரியர் நா. ஞானகுமரன் உதவிப் பொதுச் செயலாளர் யாழ் விஞ்ஞான சங்கம், யாழ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2, 3 ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இவ் விருது வழங்கப்படவுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் இம் மாதம் 31 ஆம் திகதியாகும். (உ)

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் 22 வயதுக்கு உட்பட்டோருக்கான நொக் அவுட் போட்டி இன்று முதல் எதிர்வரும் 14 ஆம திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இன்று ஏ பிரிவில் பாடும்மீன் வி க., எதிர் சென். நீக்கிலஸ் வி.க. பி.ப. 5.00 மணிக்கும்,

பி பிரிவில் வளர்மதி வி. க. எதிர் கலைவாணி வி க பி. ப 3 45 மணிக்கும் மோதவுள்ளன. (உ)

### கலைப்பீட புகுமுக மாணவருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழககலைப் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட புகுமுகமாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது,

இந்நிகழ்விற்கு அனைத்துப் புகுமுக மாணவர்களையும் தவறாதுகலந்துகொள்ளுமாறு கலைப்பீடாதிபதி கேட்டுள்ளார், (த-5)

## 3 வைத்தியசாலைகளில் ஒரு மருத்துவர் கடமையில்

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதியிலுள்ளமூன்று வைத்திய சாலைகளில் ஒரு வைத்திய அதிகாரி மட்டுமே கடமையாற்றுவதாகத் தெரிய வருகின்றது.

ஊர்காவற்றுறை, புங்குடுதீவுப் பகுதிமாவட்டவைத்திய சாலைகளிலும், வேலணை கிராமிய வைத்தியசாலையிலுமே இவ்விதம் சுழற்சிமுறையில் கடமையாற்ற ஒருவைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வைத்திய அதிகாரி வேலணை கிராமிய வைத்தியசாலையில், வாரத்தில் திங்கள் புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல்12 மணிவரையும் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலையில் திங்கள், புதன் வியாழன் ஆகிய தினங்களில் பிற்பகல் 1 மணி முதல் 4மணி வரையும், புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலையில்செவ்வாய் வெள்ளி ஆகிய தினங்களிலும் கடமையாற்றுவதாகத் தெரிய வருகின்றது. (உ-75)

## தாய்லாந்தின் இராணுவ தளபதி இலங்கை வருகை

(கொழும்பு)

தாய்லாந்து நாட்டின் இராணுவத் தளபதி சுரையுட் குளோனென்ட் இலங்கைக்கு வந்துள்ளார்.

இவர் தியத்தலாவையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தினரின் படை முகாமில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல அளித்த இராப்போசன விருந்திலும் கலந்துகொண்டார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோரை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒரு பக்கச் சார்பாக செயற்படுகிறதா?

## மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் பிரதமருக்கு மகஜர்

(தென்மராட்சி)
இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் ,வழிமுறைகள் பற்றிய மீறல்களைக் கண்காணிப்பதற்கும், விசாரிப்பதற்கும் என சர்வதேச மட்டத்தில் நியமிக்கப்பட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதன் நடுநிலைமைக் கொள்கைப் பொறுப்புணர்வில் இருந்து விலகிக் கொள்கின்றதா? என்ற வினா வடபகுதி மக்கள் மத்தியில் எழ ஆரம்பித்துள்ளது.

யாழ் மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் இணைப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள அவசர மகஜரில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் எஸ்.பரமநாதனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இம் மகஜரின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன், மற்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோருக்கும் அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டன.

மூன்று பக்கங்கள் கொண்ட அம் மகஜரின் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் பிரதித்தலைவரால் அண்மையில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட,இலங்கை அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதான தடை செய்யப்பட்ட பிரதேசங்கள் பற்றிய அறிக்கைகள் 'யுத்தம் மூலம் சமாதானம்' எனக் கூக்குரலிடுபவர்களின் எண்ணப்பாட்டினைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளன என வடபகுதி மக்கள் கருதுகின்றனர்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தினால் அண்மையில் பிரதமருக்கும் - புலிகளின் தலைவருக்கும் அனுப்பிய கடிதத்தில், இருபகுதியினராலும் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மனித உரிமைகள் மீறல்கள் பற்றியோ,குடிமக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான அதிகாரத் தன்மை பற்றியோ சுட்டிக்காட்டப்படவில்லை எனத் தெரிவித்தது

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் நாம் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியமரக்கூடிய வாய்ப்புகள் உருவாகும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். அத்துடன் தமது சமூக பொருளாதாரக் கட்டமைப்புகளைப் பலப்படுத்தலாம் எனவும் கருதியிருந்தனர். ஆனால் நடைமுறையில் எதுவுமே ஆக்கபூர்வமாக இடம்பெறவில்லை. இது விடயத்தில் குறித்த ஒப்பந்தத்தில் 4.3 ல் உரிய குறைபாடுகளை ஏற்படுத்துமாறும் கோரியிருந்தோம்.

அரச பாதுகாப்பு என்ற பெயரில் இலங்கை அரசினால் கடந்த இரு தசாப்தங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற இரு மிகக் கொடிய சட்டங்கள் காரணமாக தமிழ் மக்கள் தமது வாழ்க்கைக்கும் சுதந்திரத்துக்குமான மான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர் வடக்கு - கிழக்கில் வாழ்ந்த பெரும் எண்ணிக்கையான குடியிருப்பாளர்கள் தமது கல்வி தொழில் வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

பல ஆயிரக்கணக்கான வீடுகள்,வர்த்தகக் கட்டடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் போன்றவை முற்றாக அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன பல நூற்றுக்கணக்கான வீடுகள் பலவந்தமாக பாதுகாப்புப்படையினரால் பாவிக்கப்பட்டு வருகின்றன உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படைத் தேவைகள், வசதிகள் அற்ற நிலையில் மிகவும் பரிதாபகரமான வாழ்வை வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் 82 ஆயிரத்து 992 பேர் வேலையற்றவர்களாகவும் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 61 பேர் கீழுழைப்பு உள்ளவர்களாகவும் உள்ளனர்.

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டதால் பெரும்பாலான உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களிலும், வாடகை வீடுகளிலும் மிகவும் பரிதாபகரமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களது நீண்ட சேமிப்புக்களைச் செலவழித்து முடித்த நிலையில் தற்போது புதிய கடனாளிகளாக வாழ்கின்றனர்.

நாட்டில் அவசர கால நிலை செயலிழந்ததன் பின்னரும் பாதுகாப்புப் படையினர் பொதுமக்களின் வீடுகளைப் பலவந்தமாகப் பயன்படுத்திக் கொள்வது மனித உரிமை மீறல்கள் அல்லவா? எனவே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் சரத்து 2ல் குறிப்பிட்ட இயல்பு நிலையை ஏற்படுத்தல் விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

எனவே இது விடயத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மீள் குடியமர்வு தொடர்பான முரண்பாடுகளுக்குத் தீர்வுகளைக் கண்டு, வழு- வாழவிடு எனும் கொள்கைப் பிரகாரம் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களும், அகதிகளும் எதிர்கொள்கின்ற பல பிரச்சினைகளைத் தீர்த்து வாழக் கூடிய நிலையை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும் என ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது.என அம் மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-77)

## லக்பிம முகாமையாளரை புலனாய்வுப் பொலிஸார் நாளை ஆஜராக உத்தரவு

(கொழும்பு)
லக்பிம பத்திரிகையின் முகாமையாளரான எட்லா வில்லுக்ஸி பெரேராவை நாளை வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரிகையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியைக் கொலை செய்ய திட்டமிட்டிருப்பதாக செய்தி வெளியிட்டமை தொடர்பாகவே முகாமையாளரை நாளை ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ் வழக்குச் சம்பந்தமாக முகாமையாளரைக்குற்றப்புலனாய்வுப் பிரிவுமுன்னிலையில் ஆஜராகுமாறு ஏற்கனவே பணிக்கப்பட்டது. ஆனால், அவர் இதனைத் தவிர்த்து வருவதாகக் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

முகாமையாளர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி இவர் குறித்த பத்திரிகையின் முகாமையாளர் அல்ல எனச் சுட்டிக் காட்டியுள்ளார்

ஆனால், தேசிய சுவடிக் கூட திணைக்களத்தின் அறிக்கையை ஆதாரம் காட்டிஇவர் பத்திரிகையின் முகாமையாளர் என குற்றப்புலனாய்வு பிரிவினர் நிருபித்துள்ளனர். (உ-8)

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

**பரிசில்கள்**

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ அமரர் ச. அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்.

**போட்டியின் விதிகள்:**

★ ஆறாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

★ கட்டுரையின் தலைப்பு ''எமது கிராமம்''

★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

★ புல்ஸ்காப்தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.

★ கட்டுரைகள் 25 - 01 - 2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ______________

______________

பாடசாலை ______________

______________

கற்கும் தரம் ______________

உறுதிப்படுத்துகிறேன் ______________

வகுப்பாசிரியர்

## சமாதான முயற்சிகளை எதிர்க்கும் எண்ணம் முஸ்லிம்களுக்கு கிடையாது

### அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவிப்பு

(கொழும்பு)
முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் புரிந்து கொண்டுள்ள நிலையில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு எந்தவொரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிராக செயற்படமாட்டார்கள். வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர். கற்பிட்டிப் பிரதேசத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டுபேசுகையில்; இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக் கட்டடத்தில் அமைச்சர், தொடர்ந்தும் பேசுகையில்; இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் போது தீர்வுத் திட்டத்தை சகல சமூகங்களினதும் அந்தஸ்தைப் பேணும் வகையில் முன்னெடுத்துச் சென்றால், நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வாய்ப்பு ஏற்படும்.

வடகிழக்கு மாகாணம் முஸ்லிம் மக்களினது தாயகம் என்பதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில்,சமாதானப்பேச்சுகளின் போது முஸ்லிம் மக்கள் மீதான பார்வை ஒரு கண்துடைப்பாக அமைந்து விடக் கூடாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## கல்விசார் உபகரணங்கள் வழங்கல்

(ஆனைக்கோட்டை)
வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்கு இலவச கல்விசார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வில் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் தலா 5மாணவர்கள் பயன்பெறவுள்ளனர் (உ-201)

## மறியல் போரை முறியடிக்க பொலிஸார் முயற்சி

### மக்கள் மனம் தளரவில்லை

(திருநெல்வேலி)
வலிவடக்கு பிரதேச செயலகம் முன்பாக,மீளக் குடியமர்த்தக் கோரி வலிவடக்கு மக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டத்தில் நூற்றுக்கணக்கில் ஈடுபட்டனர்.

இதேவேளை மு.ப10 .30 மணியளவில் போராட்ட இடத்திற்குச்சென்றசுமார் 20 வரையான பொலிஸார் மக்களைக் கலைந்து செல்லுமாறு நிர்ப்பந்தித்தனர்.

இருப்பினும் மக்கள் தமது நோக்கத்தில் விடாப்பிடியாக நின்ற காரணத்தினால் பொலிஸார் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்,

இதேவேளை, மேற்படி போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழர்கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர் என் ரவிராஜ் நேரில் சென்று மக்களுடன் அளவளாவி அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார்.

அத்துடன் இது விடயமாக விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கண்டு பேசவிருப்பதாகவும் அவர்களிடம் உறுதியளித்துள்ளார். (உ-43)

## கூட்டம்


யாழ். மாவட்டத்தில்உள்ள சகல விளையாட்டு உத்தியோகத்தர்களுக்குமானமாதாந்தப் பொதுக் கூட்டம் நாளைவியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். செயலகவிளையாட்டுத்துறை பணிமனையில்மேலதிக அரசாங்கஅதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-16,6

அமெரிக்கா தாக்கினால்

# மக்களும், இராணுவமும் துணிந்து விரட்டியடிப்பர்

## ஈராக் அதிபர் சதாம் நம்பிக்கை

(பாக்தாத்)



அமெரிக்கப் படையினர் தாக்கினால் ஈராக் மக்களும் இராணுவமும் துணிந்து நின்று அவர்களை விரட்டியடிப்பர் என்று அதிபர் சதாம் ஹுசைன் கூறினார்.

'நாங்கள் எப்போதும் சரியாகத்தான் நடந்து கொள்கிறோம். எதிரிகள்தான் தவறான பாதையில் செல்கின்றனர். போர் நடந்தால் எதிரிகள் அவமானப்பட்டுத் திரும்ப நேரிடும்' என்றும் அவர் எச்சரித்தார். இராணுவ தினத்தை முன்னிட்டு அவரது பேச்சுப் பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டது. அவர் கூறியதாவது:-

இராணுவத்தினர் பதவியேற்ற போது நாட்டைக்காக்க உறுதி பூண்டனர்.

இதிலிருந்து அவர்கள் பின்வாங்கமாட்டார்கள். தாக்குதல் கடுமையானால் ஈராக் இராணுவத்தினர் செயலற்றுப்போய் பணிந்து விடுவர் என்று பிரசாரம் செய்யப்படுகிறது.

இந்தக் கணிப்பு எந்தளவிற்குத் தவறானது என்பது போர் நடக்கும் போது தெரியவரும்.

கடவுள் எங்கள் பக்கம் இருக்கிறார். எங்களுக்கு வெற்றி நிச்சயம். எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகள் திசை தவறிப்போகும். எங்களது துப்பாக்கிக் குண்டுகள் இலக்கைத் தவறாது சென்று தாக்கும்.

பலஸ்தீனத்தில் எங்கள் மக்களை இஸ்ரேல் கொன்று குவிக்கிறது. இதிலிருந்து உலக கவனத்தைத் திசை திருப்பவே அமெரிக்கா முயலுகிறது.

ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தையும் மீறி செயல்படுமாறு ஆயுதச் சோதனை அதிகாரிகளை அமெரிக்கா நிர்ப்பந்திக்கிறது. ஈராக் விஞ்ஞானிகளிடம் கடுமையாக நடந்து கொள்ளுமாறு அது தூண்டுகிறது.

நாம் எதிரியால் தவறான முறையில் கணிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறோம். நமது நேர்மையை அவர்கள் சந்தேகிக்கிறார்கள். எனவே உண்மையான நல்ல மக்களைக் கொண்ட நாடுகள் நம்மை ஆதரிப்பதோடு நம்முடன் ஒத்துழைப்பார்கள். நாம் எல்லாம்வல்ல இறைவனை நம்பி சார்ந்திருக்கிறோம். அவர்கள் சாத்தானையும் இருட்டையும் நம்பியுள்ளார்கள். எனவே நமக்கு ஒவ்வொரு நாளும் நல்ல நாளாகவே விடியும். நமது அம்புகள் குறி தவறாது. ஆனால் எதிரியின் அம்புகள் வீணாகும். (பி)





டோக்கியோ நகரில் புத்தாண்டையொட்டி நடந்த அலங்கார எழுத்துப் போட்டியில் ஜப்பான் சிறுமியின் வர்ண ஜாலத்தினைப் படத்தில் காண்கிறீர்கள்.

## எகிப்தில் 14 பேர் கைது

இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்த 14 உறுப்பினர்களை எகிப்திய பாதுகாப்புப்பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

செப்டம்பர் மாதம் அமெரிக்கத் தாக்குதல் நடைபெற்ற பின்னர் இந்த இயக்கம் தொடர்பாக எகிப்து கடுமையாக நடந்து வருகிறது.

# தானே ஜீசஸ் எனக் கூறி ரகளை செய்த பெண்

(சேலம்)

சேலம் பொலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் அனுமதியின்றி நுழைந்து நான் தான் ஜீசஸ் என்றும், சொர்க்கத்திலிருந்து வந்திருக்கிறேன் என்றும் கூறி ரகளை செய்த பெண்ணை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

சேலம் முள்ளுவாடி கேட் அருகே உள்ள கமிஷனர் அலுவலகத்தில் 40வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் வந்தார். சிவப்புச் சுடிதாருடன் வெளிநாட்டுப் பெண் போலக் காணப்பட்ட இவர். பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில் பொலிஸ பாதுகாப்பையும் மீறி கமிஷனர் வளாகத்திலுள்ள நுண்ணறிவுப் பிரிவுக்குள்ளே நுழைந்தார். இதை பார்த்த பொலிஸார ஏதோ புகார் கொடுக்க வந்திருக்கிறாரோ என நினைத்து அவரிடம் பேச்சுக் கொடுத்தனர்.

தனது பெயர் ஜீசஸ் என்றும், சொர்க்கத்திலிருந்து நேராக வருவதாகவும் கூறிக்கொண்டு ஐந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் மாறிமாறிப் பேசத் தொடங்கினார். இதைப் பார்த்த பொலிஸார் உடனடியாக அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கும் தகவல் கொடுத்தனர். இதனையடுத்து சப்-இன்ஸ்பெக்டர் கலையரசி மற்றும் பொலிஸார் கமிஷனர் அலுவலகத்திற்கு விரைந்து வந்து அப்பெண்ணை அலுவலகத்திலிருந்து வெளியேற்ற முனைந்தனர். அதற்குள் அவர் அங்கிருந்து ஓடத்தொடங்கினார். இதைப் பார்த்த பெண் பொலிஸார் சினிமாவில் வருவது போல மெயின் றோட்டில் ஓடிப்பிடிக்க முயன்ற போது, தன்னிடமிருந்த ஒரு பேனாவை எடுத்து பொலிஸாரை நோக்கிச் சரமாரியாகத் தாக்கத் தொடங்கினார். இதல் பெண் பொலிஸார்கள் படுகாயமடைந்தனர். இருந்தாலும் பொலிஸார் திறமையாக அப்பெண்ணை மடக்கிப் பிடித்து ஜீப்பில் ஏற்றி மகளிர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

அங்கே பொலிஸார் விசாரணை செய்த போது தான் சொர்க்கத்திலிருந்து வருவதாகவும் தன்பெயர் ஜீசஸ் என்றும் கூறினார். மேற்கொண்டு விபரங்களைக் கேட்டபோது தமிழ், ஆங்கிலம், இந்தி, உருது, பாரசீகம ஆகிய மொழிகளில் கலந்து பேசினார்.

இதனையடுத்து பொலிஸார் இந்தப் பெண்ணை அரச மருத்துவமனையில் மனநிலைப் பிரிவுக்கு அனுப்பி வைத்தனர். (பி)

WORLD NEWS உலக தரிசனம்

## பாகிஸ்தானுக்கு 400வாகனங்கள

அல்கெய்டா இயக்க உறுப்பினர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சிக்கென 13மில்லியன் பெறுமதியான 400 வாகனங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது. மேலும் 73மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது.



TATA ஓபன் ஏடிபி டென்னிஸ் சாம்பியன் பட்டத்தைத் தாய்லாந்து வீரர் பாரடான் ஸ்ரீ சாப்பான், ஸ்லோவாகியா வீரர்கரோல் குசேராவை 6-3, 6-1 என்ற நேர் செட்டில் தோற்கடித்துச் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

வடகொரிய அனுஆயுத

# திட்டத்தைக் கைவிடச் செய்ய முத்தரப்பு ஆலோசனை

(வாஷிங்டன்)

வடகொரியாவை எவ்வாறு அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிடச் செய்யலாம் என்பது குறித்து தென்கொரியாவுடனும், ஜப்பானுடனும் அமெரிக்கா கலந்தாலோசித்துள்ளது.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் இடம்பெற்ற இம்மூன்று நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இந்த விடயம் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த விவகாரம்தொடர்பாக அமெரிக்கா வட கொரியாவுடன் சுமுகமாகப் பேசித் தீர்க்க வேண்டுமென்ற தென்கொரியாவின் யோசனைக்கு அமெரிக்கா மிக நிதானமாகக் கவனம் செலுத்தி ஆராய்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சர்வதேச உடன்படிக்கைகளுக்கு எதிராக வடகொரியா மேற்கொண்டு வரும் இரண்டு அணு ஆயுதத்திட்டங்களையும் கைவிட முன்வந்தால், அந்த நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கவும் எரிபொருளை இலவசமாக வழங்கவும் அமெரிக்கா முன்வர வேண்டும் என்ற யோசனையை தென்கொரியா முன்வைத்துள்ளது.

வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தான் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளது. அத்துடன் வடகொரியாவினால் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் வடகொரியாவுக்குள் அனுமதிக் குமாறு கோருவதற்கான வாய்ப்பொன்றை அமெரிக்கா வடகொரியாவுக்கு வழங்கியுள்ளதாகவும் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி-2)



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தின் மீது படிந்த பனிப் பாளங்களை அந்நாடு இயந்திரங்களின் உதவியுடன் அகற்றுகிறது. பின்னணியில் தெரிவது கிரெம்ளின் மாளிகைப் பகுதி

# வன்முறையைக் கைவிட்டு நிதானமாகச் செயல்படுங்கள்

## பலஸ்தீன - இஸ்ரேலியர்களுக்கு ஐ.நா. பொதுச் செயலர் யோசனை

(வாஷிங்டன்)

பலஸ்தீனர்கள் தற்கொலைத் தாக்குதல்களைக் கைவிடவேண்டும். அதே சமயம் இஸ்ரேலியர்களும் நிதானத்துடனும் பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும். வன்செயல்கள் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பலஸ்தீனப் போராளிகள் தற் ... வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின செயலாளர்நாயகம் கோபிஅனான் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பலஸ்தீனப் போராளிகளின் இரட்டைத்தற்கொலைத் தாக்குதலையடுத்தே கோபி அனான் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார.

வன்முறைகளுக்குத தரவு காண்பது என்பது முடியாத விடயம் என்று குறிப்பிட்ட இவர், இத்தகைய தாக்குதல்கள் நியாயமற்றதொன்று எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை இஸ்ரேல் பொறுப்புடனும் நிதானத்துடனும் செயற்பட வேண்டும் அவ்வாறு செயற்பட்டால் தான் பலஸ்தீனப் போராளிகளின் தற்கொலைத் தாக்குதல்களைத் தவிர்க்க முடியுமென்று கோபிஅனான் மேலும் குறிப்பிட்டுள்ளார். (பி-2)

# இன்று ஒரு தகவல்

## தொண்டே பரலோகம்

ஓர் ஊரில் ஒரு பாதிரியார் இருந்தார். வெகுநாட்கள் சந்தோஷமாக வாழ்ந்தார். ஒரு நாள் அவர், மடத்துசமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவித்துலக்கிச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே ஒரு தேவதூதன் அவர்முன் வந்துநின்றான். இவர் நிமிர்ந்துபார்த்தார். 'ஆண்டவர் என்னை உன்னிடம் அனுப்பியிருக்கிறார். பரலோகத்தில் வாசம்செய்வதற்கு உங்களுக்கு நேரம் வந்துவிட்டது' என்றான்; 'ஆண்டவருக்கு என்னுடைய ஞாபகம் வந்ததற்கு நன்றி. ஆனாலும்...இப்பொழுது இங்கே நீயேபார். எவ்வளவு பாண்டங்கள் பாக்கியிருக்கின்றன; இவ்வளவையும் நான் சுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது: நான் நன்றிகெட்டவனாக இருக்க விருப்பவில்லை இந்தப் பணியைநான் முடிக்கிறவரைக்கும் என்பரலோக வாழ்வைத் தள்ளிவைக்க முடியுமா? நீ என்ன நினைக்கிறாய்? என்றுகேட்டார்.

தேவதூதன் தனக்கே உரிய விவேகத்தோடு...அப்போது பாதிரியாரைப் பார்த்தான் 'சரி...என்னசெய்யலாம் என்பதைப் பின்னர் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான் ஒருநாள் அந்தப்பாதிரியார் தோட்டத்திலுள்ள களைகளையெல்லாம் ஒருகளைக்கொத்தியால் கொத்திக்களையெடுத்துக்கொண்டிருந்தார். அந்தச்சமயத்தில் இந்தத் தேவதூதன் மறுபடியும் அவர் முன்வந்து நின்றான். பாதிரியார் பார்த்தார்; 'இதோ பார்! இந்தத்தோட்டம்பூராவும் எவ்வளவு களைகள் மண்டிக்கிடக்கின்றன? பரலோகம் கொஞ்சக்காலம் எனக்காகப் பொறுத்திருக்கலாம் என்று நீ நினைக்கிறாயா?' என்று கேட்டார்;

தேவதூதன் சிரித்துக்கொண்டே மறுபடியும் மறைந்துவிட்டான். மறுபடியும் அவர்களைஎடுபட்டு: தானியக்களஞ்சியத்துக்கு வர்ணம் பூசுவதுபோன்ற வேலைகளில் ஈடுபட்டார். இன்னொருநாள் ஒரு மருத்துவமனையில் நோயாளிகளைக் கவனிக்கிறவேலையில் ஈடுபட்டிருந்தார் அந்தப் பாதிரியார் ஒரு நோயாளியின் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்து விட்டு நிமிர்ந்து பார்க்கிற பொழுது தேவதூதன் மறுபடியும் அவர் முன்தோன்றினான், இந்தத் தடவை பாதிரியார் தன்னலமற்றவராக... பேரன்டைக் காட்டக் கூடியவகையில்.. தன்னுடைய இருகைகளையும் உயர்த்தியபடி.. தேவதூதனின் கவனத்தைப் பிணியால் வாடக் கூடிய நோயாளிகளின் பக்கம் திருப்பினார்; தேவதூதன் ஒன்றும் சொல்லவில்லை:மறைந்து விட்டான்.

அன்று மாலையில் பாதிரியார், மடத்திலுள்ள தனது அறைக்குப்போய்இளைப்பாறினார். யோசித்துப்பார்த்தார் தேவதூதனையும், தேவதூதனின் விருப்பத்தைப் பல நாட்கள் தள்ளிப் போட்டுக்கொண்டுவந்ததையும்நினைத்துப் பார்த்தார். திடீரென்று தான் முதுமையடைவதையும், சோர்வடைவதையும் உணர்ந்தார். ஆண்டவரை நினைத்தார். 'ஆண்டவரே! உம்முடைய தூதனை மறுபடியும் என்னிடம்அனுப்பினால் நான் சந்திப்பதற்கு ஆவலாக இருக்கிறேன்' என்று சொல்கின்றபொழுதே தேவதூதன் பக்கத்தில் வந்து நின்றான், பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார். 'நீஇப்பொழுதே என்னை அழைத்துக் கொண்டு போக விரும்பினால், நான்பரலோகத்துக்குவரத் தயாராக இருக்கிறேன்' என்றார்.

தேவதூதன் அந்தப் பாதிரியாரை அன்போடும் விவேகத்தோடும்பார்த்து, 'நீங்கள்இதுவரையும் எங்கே இருந்ததாக நினைக்கிறீர்கள்? 'என்றான் பரலோகம் என்றால் என்ன என்று புரிந்து கொள்வதற்கு இந்தச் சம்பவம் நமக்கு உதவியாக இருக்கின்றது. தொண்டு செய்வதைவிடப் பெரியசெயல் வேறு எதுவும் இருக்கமுடியாது. அது நமதுமனத்திற்குக் கொடுக்கிறசுகத்தை வேறுஎதுவும் கொடுக்க முடியாது. ஆனால், இந்தக் காலத்தில், நாம் தொண்டுசெய்யவேண்டுமென்று நினைத்து ஏதாவது ஆரம்பித்தால் கூட, அதைஒரு மாதிரியாகச் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கஆரம்பித்து விடுகிறார்கள் சார்!

ஒருபெரியவர் அப்படித்தான் ஒரு தொண்டு செய்து கொண்டிருந்தார். ஒருகோவில் கட்டிக்கொண்டிருந்தார். அதிலே ஓரிடத்தில் ஒருபலகையை வைத்து ஆணி அடிக்கிற வேலையைச் செய்து கொண்டிருந்தார் அந்தப் பெரியவர். ஒருசிறுபையன் அதைமிகவும் ஊக்கமாகவும், அக்கறையாகவும் கவனித்துக் கொண்டிருந்தான். பெரியவர் இதைக்கவனித்தார். 'என்னப்பா பார்க்கிறாய்? உனக்கும் இது மாதிரித் தொண்டு செய்யவேண்டுமென்று ஆசையாக இருக்கிறதா?' என்றுகேட்டார். இதற்கு அந்தப்பையன் 'அப்படிஇல்லைசார்! நீங்கள் ஆணி அடிக்கின்றபொழுது கையிலே சுத்தியலால் அடித்துக்கொண்டால் என்ன செய்வீர்கள்' என்று தெரிந்துகொள்வதற்குத்தான் நிற்கிறேன் 'என்றான்சார்; ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேச்சுவார்த்தை தொடர்பில் பாலா- பீரிஸ் ஒருமித்த கருத்து வெளியீடு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்இடையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் எவ்வித முட்டுக்கட்டைகள் ஏற்பட்டாலும்தொடர்ந்தும் நகர்த்திச் செல்லப்படும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர்அன்ரன் பாலசிங்கம் பேராசிரியர் ஜி எல் பீரிஸும் ஒருமித்த கருத்தை வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு மாலை இவர்கள்இருவரும்றோஸ்கார்டன்றிசோர்ட் விடுதிஅருகில் அமைந்துள்ள 4ஆம் இலக்க 'தாய இல்லத்தில்' உத்தியோகப் பற்றற்ற முறையில் அதி உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகநடத்திய பேச்சுவார்த்தையின் போதே இவ் ஒருமித்த கருத்தை தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இப்பேச்சுக்களின் போது அதி உயர் பாதுகாப்பு வலயங்களை விட்டு இராணுவத்தை வெளியேற்றுதல், அப்பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்தல், என்பன முக்கியமாக கலந்துரையாடப்பட்டதுடன்,முஸ்லிம் விவகாரம், சமஷ்டி ஆட்சிமுறை பற்றியும் பேசப்பட்டதாக அங்கிருந்து எமதுசெய்தி யாளர் தெரிவித்துள்ளார். (உ-8)

ஸ்ரீ சு. க. - ஜே. வி. பி

# இணைந்து செயற்படுவது பற்றி இன்னும் பேசி முடிவெடுக்கவில்லை

## பொ. ஐ. மு. பொதுச் செயலாளர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து செயற்படுவது தொடர்பாக கட்சியின் உயர் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் எவையும் நடைபெறவில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம் ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் சிலருக்கிடையில் இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருக்கலாம். இவ்வாறு தனிப்பட்ட நபர்களுக்கிடையில்இதுதொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும், கட்சி என்ற ரீதியில் இன்னும் இது தொடர்பாக எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்தே செயற்படப் போவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்;

தொடர்ந்தும் கூறுகையில், அரசாங்கத்திலுள்ள பல அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பாகவே தற்போது கட்சிக்குள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவருகின்றன என்றார்.

கடந்த 30 ஆம் திகதி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து பொதுக் கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ஆரம்பித்துவைத்தார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சீமெந்து வந்தது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 2ஆயிரத்து 42 மெற்றிக் தொன் சீமெந்துடன் எம்.வீ சிற்றி ஒவ் வீவப்பூ என்ற கப்பல் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துள்ளது.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான சீமெந்தே இக்கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது. (த-6)

## இராசி பலன்

8- 1- 2003
(மார்கழி 24, புதன்)
சஷ்டி வை 5 03 வரை
பூரட்டாதிமு இ 11. 12வரை
இராகுகாலம். 12 32- 2. 02
சுபநேரம் -4 02- 6.32
சஷ்டி விரதம்

**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும்

**இடபம்**
அதிக பிரயாசை, நல்ல செய்தி, பிறர்உதவி, காரிய அனுகூலம்

**மிதுனம்**
கட்டுப்பாடு, பிரயாணம், தனவரவு, உடல் உழைப்பு

**கடகம்**
எதிர்பாராத அச்சம், முயற்சிகைகூடும், வாகனபயம், நண்பர்கள் வெறுப்பு

**சிம்மம்**
திடீர்பயணம், நல்லவரவேற்பு, சகோதரர்உதவி, தொழில் மேன்மை

**கன்னி**
நல்லசம்பவம், செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம் தேகநலன்

**துலாம்**
வியாபார விருத்தி, கடும் முயற்சி, தாழ்ந்த சுபாவம், போசன சுகம்

**விருச்சிகம்**
ரோகபயம், மாதா சுகம், சொத்துக்களால் நன்மை, காரிய தாமதம்

**தனுசு**
தடைப்பட்ட கருமம் கைகூடும், இனியசம்பவம், அன்னியர் சந்திப்பு, தனவரவு

**மகரம்**
மதிப்புக்குறைவு, தனவிரயம், முயற்சிதாமதம், நித்திரைக்குறைவு

**கும்பம்**
போசனசுகம், ஆழ்ந்த சிந்தை, மேலதிகாரிகள் ஒத்துழைப்பு, முயற்சிபலிதம்

**மீனம்**
கோபப்படுதல், காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, வேலைக்கஷ்டம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## நிதிப் பற்றாக்குறையால் திட்டங்கள் பின்னடைவு

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பணிகளைமுன்னெடுப்பதற்கு நிதிப் பற்றாக்குறை பெரும் தடையாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் புதிய ஆண்டில் செயற்படுத்த எண்ணியுள்ள திட்டங்கள் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளன.

இவ்ஆண்டு முதல் யாழ். குடாநாட்டில் மனித உரிமை சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மனிதஉரிமைக் கல்விப் போதனைகள் நடத்தத் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## வட-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் சிங்களவருக்கே உரியன

(தங்காலை)

தென்பகுதியில் தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்கள மக்களுடன் அமைதியாக வாழமுடியாவிடில் அவர்கள் கேட்கும் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குப் போய்விட வேண்டும். ஏனைய ஏழு மாகாணங்களையும் சிங்கள மக்களிடம் விட்டுவிட வேண்டும்.

இவ்வாறு கூறினார் தங்காலை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் மக்கள் முன்னணி உறுப்பினருமான டி. வி. உபுல்:

தலைவர் எஸ். கே. கித்சிறி தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்; தங்காலை மற்றும் ஹம்பாந்தோட்டைப் பகுதிகளில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கிடையில் பிரச்சினைகள் எதுவும் இல்லை வடக்கு-கிழக்கிலும் கூட சிங்களவர்கள் வாழ வேண்டும் என்றார்.

இந்த விடயத்தை சபை விவாதிக்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். (பி)

## கோழி வளர்ப்பு திட்டம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் மத்தி ஜே/142 கிராம அலுவலர் பிரிவில், மீளக்குடியமர்ந்த குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்களின் பொருளாதாரத்தினை உறுதிசெய்யும் வகையில் பட்டினிக்கெதிரான நிறுவனம் கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளது. (உ-232)

## பல்கலைக் கழகங்களில் சட்டம் ஒழுங்கை அரசு நிலைநாட்ட வேண்டும்

### ஓ. பி. ஏ கோரிக்கை

(கோட்டை)

ஒவ்வொரு மாணவரும் அச்சமின்றி கல்வி பெறுவதை உறுதி செய்யும் வகையில் பல்கலைக்கழகங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்படி தொழிற்சார் அமைப்புக்களின் சங்கம் (ஓ. பி. ஏ) அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் மிருகத்தனமாக பகிடிவதைகள் இடம்பெறுவது குறித்து தாங்கள் கவலையடைந்துள்ளதாகவும், அண்மையில் இப்படியான ஒரு நிகழ்வு சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனின் உயிருக்கே உலை வைத்து விட்டதாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியிருப்பதுடன் இம்மாதிரியான பகிடிவதைகளைத் தாம் கடுமையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு அல்லது அதுபோன்ற உயர்கல்வி நிலையத்துக்கு தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு மாணவரும் அச்சமின்றி தமது கல்வியைத் தொடர்வதற்கு சுதந்திரமிருக்கவேண்டும். ஏனைய பொது அமைப்புகளுக்கு இருப்பதுபோல இந்தக் கல்வி பீடங்களிலும் அடிப்படை உரிமைகள் பேணப்படும் நிலைமை இருக்கவேண்டும்:

எனவே, பல்கலைக்கழகங்களிலும் ஏனைய உயர்கல்வி பீடங்களிலும் பகிடிவதைகள் இடம்பெறாதவாறு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேற்படி சங்கம் வலியுறுத்தியுள்ளது. (பி)

# யாழ்.தளபதி சரத் பொன்சேகா மீது
# ஐ.தே. மூத்த அமைச்சர்கள் அதிருப்தி

## உயர் பாதுகாப்பு வலயச் சர்ச்சைக்கு அவரே காரணமாம்!

(கொழும்பு)

இராணுவ அதிகாரிகளின் தூரநோக்கின்மையே யாழ். குடாநாட்டின் அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகச் சர்ச்சைகள் மூள்வதற்கு காரணமாக உள்ளது என ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சர்ச்சை உருவாகியிருக்கத் தேவையில்லை அதனை இலகுவாகத் தவிர்த்திருக்கலாம் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஐந்து பக்க ஆவணத்தினை விடுதலைப் புலிகளிடம் கையளித்திருக்கக் கூடாது.

அது இராணுவத்தின் கருத்துக்களை வெளிப்படுத்தும் இரகசிய ஆவணம் இதனைப் புலிகளிடம் கையளிப்பதற்கு முன்னர் அதிலடங்கியிருந்த முக்கிய பகுதிகளை அகற்றியிருக்க வேண்டும்: எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

புலிகளுக்கு அனுப்பப்பட்ட ஆவணத்தில் புலிகளை பயங்கரவாதிகள் எனப்பலதடவை குறிப்பிட்டுள்ளது; புலிகளின் மனநிலையைஎவ்வாறு பாதிக்கும் என்பதை பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பிரதிநிதிகள் கூட அறிந்திருக்கவில்லையா எனஅவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதேவேளை,இவ் விவகாரம் ஐக்கிய தேசிய முன்னணிக்கு கடும் அழுத்தங்களை அளித்துள்ளது.

அரசாங்கமும், இராணுவமும் ஒருவருக்கு ஒருவர் மோதல் போக்கை கடைப்பிடிக்கின்றனராஎன்ற கேள்வியையும் இராஜதந்திர வட்டாரங்கள் எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## தளபாட வசதியின்றி மாணவர் அவதி

(தென்மராட்சி)

யுத்தத்தின் போது சேதமடைந்த சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் போதிய தளபாடவசதிகள் இல்லாமையினால்,அங்கு பயில்கின்ற மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக வித்தியாலயத்தின் ஆரம்ப பாடசாலையில் பயில்கின்ற மாணவர்கள் தமது கல்வியைப் பெறுவதில் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதேவேளை,சேதமடைந்த பல மேசைகள், கதிரைகள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

# நான்காம் சுற்றுப் பேச்சு வார்த்தை சிக்கல் நிறைந்ததாய் இருக்கும்

## எரிக்சொல்ஹெய்ம் கருத்து

(பாங்கொக்)

அரசு- புலிகளுக்கிடையேயான நான்காம் சுற்றுப்பேச்சு வார்த்தை சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும். ஆனால் ஒவ்வொரு கட்டத்திலும் பாரிய திருப்பு முனைகளை எதிர்பார்க்க கூடாது,

இவ்வாறு நோர்வே சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இடம்பெற்று வரும் பேச்சுக்கள் மிகமுக்கியமானவை சிக்கலான விடயங்கள் பலவற்றுக்குத் தீர்வு காண்பதாயின் இருதரப்பும் பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## அஷ்ரப் மரண அறிக்கை பகிரங்கப்படுத்த கோருகிறார் மஜீத்

(கொழும்பு)

ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மறைந்த அஷ்ரப் பயணம் செய்த ஹெலிகொப்டர்விபத்துக்குள்ளானமை தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் அப்துல் மஜீத் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது எமது மறைந்த தலைவர் பயணம் செய்த ஹெலிகொப்டர் தொடர்பான முழுவிபரங்கள் அடங்கிய அறிக்கைகடந்த ஒருவருடத்துக்கு முன்னரே ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், அவ்வறிக்கை இதுவரைவெளியிடப்படவில்லை. இதனால், கட்சிக்கும் ஏனைய முஸ்லிம்மக்களுக்கும்இடையே இது தொடர்பாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அஷ்ரப்பின் மரணத்தை அரசியல் இலாபத்துக்காகப்பயன்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-8)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் மேலதிக விபரங்களை இம் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்பாக தன்னுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென பணிப்பாளர் ரி.ராஜரட்ணம் தெரிவித்தார். (உ)

## மகாபொல கொடுப்பனவை பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் மகாபொல கொடுப்பனவு பெறத் தகுதி பெற்றும், அதனை இன்னமும் பெற்றுக்கொள்ளாத மாணவர்களை உடனடியாக கொடுப்பனவைப் பெறுமாறு நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சந்திப் பகுதியில் கடந்த வெள்ளியன்று மாலை பயணிகளுடன் சென்ற மினி பஸ்களை அடித்து நொருக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி இ. பிறேம் சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் இரு மினிபஸ்கள் பலத்த சேதமுற்றதும் ஒருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## வவு. மீள்குடியமர்வுக்கு பேச்சளவில் இணக்கம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சில பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர இராணுவத்தினர் அனுமதியளித்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று வவுனியா அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போது படையினர் இந்த அனுமதியை வழங்கியுள்ளனர்.

இக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகளும், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கலந்து பேசி மேற்படி முடிவினை எடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதில் கடந்த சிலமாதங்களாக இரு தரப்பினருக்கும் இடையில் சர்ச்சைகள் இருந்து வந்தன.

இவ் முரண்பாடு காரணமாகவே இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கிணங்க ஓமந்தை முதல் தாண்டிக் குளம் வரையிலான 8 கிலோமீற்றர் தூரத்திற்கிடைப்பட்ட 11 கிராமங்களில் மக்களை மீளக்குடியமர இராணுவத்தினர் அனுமதியளித்துள்ளனர்.

எனினும், இது தொடர்பான இறுதி முடிவு வவுனியா மாவட்டத்தின் பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், இப்பிரதேசங்களில் புதைக்கப்பட்ட நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கும் இக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

எனினும் அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து 600 மீற்றர் பிரதேசத்திற்கு அப்பாலேயே மக்களைக் குடியமர்த்த முடியும் என ஏற்கனவே இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், இராணுவத்தினர் தற்போது விட்டுக் கொடுப்புக்களை செய்திருப்பது திருப்தியளிக்கிறது என வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## குருநகர் சீநோர் மீன்சந்தை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீநோர் மீன் சந்தையைவிஸ்தரிப்பதற்குஇந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நிதி ஒதுக்கியுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கச்சமாசத் தலைவர் எஸ். தவரெட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை, கட்டடங்களைப் புனரமைப்புச்செய்யும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது இப்புனரமைப்புப் பணி மார்ச் மாத இறுதிப்பகுதியில் முடிவடையும் என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-6)

## குடாநாட்டு குடிநீர் மாதிரிகள் கொழும்புக்கு

(சுதுமலை)

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட சிகிச்சைக்கு பயன் அளிக்காத வைரஸ்காய்ச்சல் காரணமாக பாதிப்புற்றவர்கள் உள்ள இடங்களின் குடிநீர்மாதிரிகள் பெறப்பட்டு கொழும்பில் உள்ள மருத்துவபரிசோதனை ஆராய்ச்சி நிலையத்திற்கு திங்கட்கிழமை அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள குடிநீர்கிணறுகள், மற்றும் ஐஸ்கிறீம் விற்பனைநிலையங்கள் யாழ் நகரப்புற பிரதான உணவகங்களில் உள்ள குடிநீர் பெறும் கிணறுகளும், மற்றும் பொதுமக்களின் பாவனைக்கு தினமும் பயன்படும் குடிநீர் கிணறுகளிலும் நீர்மாதிரிகள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் பெறப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது; (உ-252)

## முற்றவெளிப் பகுதியில் நடைபாதை வியாபாரம்

### பிராந்திய ஆணையாளர் அதிருப்தி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் வரலாற்று சமூக முக்கியத்துவம் வாய்ந்த முற்றவெளிப் பகுதியும் புல்லுக்குளக் கரையோரமும் நடைபாதை வியாபாரிகளின் தற்காலிக கொட்டகைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதால் நகரத்தின் தொன்மையும் மகிமையும் சீரழிக்கப்பட்டு வருகின்றது. எனவே இவற்றினை உடனடியாகஅகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் கலாநிதி க. குணராசாயாழ். மாநகரசபை ஆணையாளரை கேட்டுள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக ஆணையாளர் மாநகரஆணையாளருக்கு நேற்றுமுன்தினம் எழுதியுள்ள கடிதத்தில் நடைபாதை வியாபாரிகளால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகள் அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, யாழ். நகரில் அமைந்துள்ள புல்லுக்குளக் கரையோரமாக நடைபாதை வியாபாரிகளால் ஓரளவு நிரந்தரமான கட்டிடங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கும்படி சமநல சேவை ஆணையாளருக்கும் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். நகரமையத்தில் இயங்கிய நடைபாதை வியாபாரம் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு யாழ் முனீஸ்வரன் வீதியில் இவர்களுக்கான தற்காலிக கொட்டகைகள் அமைக்கும்படி யாழ்ப்பாண மாநகரசபை கேட்டிருந்தது; அதன்பிரகாரம் முனீஸ்வரன் வீதியில் தற்காலிகக் கொட்டகைகளை நடைபாதை வியாபாரிகள் அமைத்துள்ளபோதிலும்,கூட பிரதான வீதிக்கு அப்பாலுள்ள முற்றவெளிப்பகுதிகளில் சிலதற்காலிகக்கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன

இதேவேளை இதுவிடயம் தொடர்பாக பிராந்திய ஆணையாளர் யாழ் மாநகர முதல்வர் செல்லன்கந்தையனுடன் தொடர்புகொண்டு, குறித்தபகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகளை அகற்றி நகரின் புனிதத்தன்மையையும் தொன்மையையும் பேண ஆவன செய்யும்படி கேட்டுள்ளார்.

யாழ் முதல்வர் மேற்படி தற்காலிகக் கொட்டகைகளை உடன்அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி மாநகர ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் எனவும் அறியப்படுகிறது.

இது இவ்விதமிருக்க யாழ் முனீஸ்வரன் வீதியில் தற்போது இடம்பெற்றுவரும் நடைபாதை வியாபாரம் காரணமாக அப்பகுதியில் காலைமுதல் மாலைவரை சனநடமாட்டம் அதிகரித்துள்ளது. (உ-77)

# அகிலத்தை அச்சுறுத்தும் அணு ஆயுதப் போட்டிகள்

இன்றைய உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

அழிவை நோக்கியா? அல்லது ஆக்க பூர்வமான அமைதியான எதிர்காலத்தை நோக்கியா? இந்த கேள்வியானது உலக விவகாரங்களை உன்னிப்பாக அவதானித்து வரும் அனைவர் மனங்களிலும் பூதாகாரமாக எழுந்து நிற்பதை யார் மறுப்பார்கள்?

என்றாலும் இந்த ஆண்டின் இறுதிக்குள்ளேயே இதற்குப்பதில் கிடைத்து விடும் போல் தோன்றுகின்றது. ஈராக் மீது எந்த நேரத்தில் அமெரிக்காவும், பிரிட்டனும் சேர்ந்து குண்டுகளைப பொழியப் போகின்றனவோ என்ற கவலையை எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கும் அதேவேளை 'விட்னோ பார்' என்ற போக்கில் ஈராக்கும் பதில் சவால் விட்டுக்கொண்டிருக்கிறது.

ஏராளமான அழிவாயுதங்களை (அணு ஆயுதம் உயிரியல் மற்றும் நச்சு வாயுக்களைக் கக்கும் ஆயுதங்களை) ஈராக் ஒளித்து வைத்திருப்பதாக அமெரிக்கா சந்தேகிக்கிறது.

ஐ.நா. பரிசோதகர்கள் ஈராக்கில் நடத்தியுள்ள ஆய்வுகளில் இன்னமும் அமெரிக்காவுக்குத் திருப்தியில்லை. அது திருப்தியடையும் வரை ஈராக் மீதான மேற்கிந்திய அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கப் போகிறது.

எங்கள் மீது கைவையுங்கள் பார்ப்போம் என்று ஈராக் தரப்பில் குரல் வந்து கொண்டிருக்கிறது. ஈவிரக்கமின்றி அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதல்நடத்துவோம் என்று ஈராக் கூறியிருப்பது மேற்குலகை சற்று அதிகமாகவே சிந்திக்க வைத்திருக்க வேண்டும் ஏனொன்றால் ஈராக்கிடம் இரகசியமான அழிவாயுதங்கள் இருப்பதான பயம் ஏற்கனவே இருந்து வருகிறது. அவைகளை கண் மூடித்தனமாக பாவிக்க ஈராக் அஞ்சாது என்று அவர்கள் நினைப்பதில் தவறில்லை.

ஈராக் மீதான யுத்தமானது அதைச் சுற்றியுள்ள நாடுகளையும் பாதிக்கவே செய்யும். எனவே அந்த நாடுகள் ஒன்றில் அமெரிக்காவை அல்லது ஈராக்கை ஆதரிக்க வேண்டும்.

## ராஜதந்திரக் குண்டுகள்

இதற்குள் வடகொரியா திடீரென சில ராஜதந்திர குண்டுகளை அமெரிக்கா பக்கம் செலுத்திவிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அணு உற்பத்திக்கான புளுட்டோனிய சோதனைகளை நடத்தியது உண்மை தான் என்று அது ஒப்புக் கொண்டிருப்பதானது இரகசியமாக அணு குண்டையும், தயாரித்திருக்கலாம் என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கக்கூடும்.மேலும் மூடப்பட்டு ஐ.நாவின் அவதானிப்புக் கமராக்களால் கண்காணிக்கப்பட்டு வந்த அணு அலையையும் வடகொரியா மீண்டும் இயக்குவதற்கு ஆயத்தம் செய்துள்ளது. கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த ஐ.நா. அவதானிகளையும் அந்நாடு வெளியேற்றிவிட்டது.

இந்த நிலையில் இரண்டு விதமான நிலைமைகளை அமெரிக்கா எதிர் கொள்ள வேண்டிய நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளது.

ஒரு பக்கம் ஈராக்கின் அழிவு ஆயுதங்கள், மறுபக்கம் வடகொரியாவின் அணு ஆயுதஉற்பத்தி மிரட்டல்கள்.

இரண்டையும் ஒரேசமயத்தில் எதிர் கொண்டு வெற்றி வாகை சூடுவோம் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் மார் தட்டியிருக்கிறார்.

## தவிர்க்கும் முயற்சியில் ஜப்பான் ஈடுபடுமா?

ஏற்கனவே ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா ஆபத்து அமெரிக்காவையும் அதன் நேசநாடுகளையும் பயமுறுத்திக் கொண்ருக்கும் வேளையில் இப்புதிய நிலைப்பாடு எப்படி முடியும் என்று தெரியவில்லை.

## இரகசிய பரிமாற்றம்

இதற்கிடையில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான பாகிஸ்தான் வட கொரியாவுக்கு அணுநுட்ப இரகசியங்களைக் கொடுத்துதவிய விசயம் மெதுமெதுவாக வெளியில் வந்துள்ளது.

டைம்ஸ் சஞ்சிகை இப்படியெல்லாம் அமெரிக்காவின நண்பனான பாகிஸ்தான் வடகொரியாவுக்கு அணு நுட்பத்தை இரகசியமாக வழங்கியுள்ளதே என்ற செய்தியை வெளியிட்ட கையோடு 'இல்லை இல்லை அப்படி ஒன்றும் நாங்கள் செய்யவில்லை' என்று பாகிஸ்தான் தலைவர்கள் அடித்துச் சொல்லிவிட்டார்கள்.

'அப்படிச் செய்வது சரியில்லை செய்திருந்தால் அதன் விளைவுகளை பாகிஸ்தான் எதிர்கொள்ள நேரும்' என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் சற்றுக்கடுமையாகவே சொற்களை உச்சரித்து இருந்தார்.

இப்பொழுது கதை வேறு விதமாக மாறி இருக்கிறது பாகிஸ் தான் அரசு அல்ல, சில விஞ்ஞானிகளும், அதிகாரிகளும் தான் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று பாகிஸ்தான் கூற அமெரிக்காவும் ஆமோதித்து இருக்கிறது.

வடகொரியாவிடம் இருந்து ஏவுகணை தொழில் நுட்பத்தை பெற்றுக் கொண்டு அணு ரகசியங்களை பாகிஸ்தான் அதற்கு வழங்கியதாகத்தான் முதலில் வந்த செய்திகள் கூறின. அணு ஆயுத இரகசியம் எப்படிப் போனால் என்ன பாகிஸ்தானில் இருந்து தானே போயிருக்கிறது இதை ஏன் அமெரிக்கா கண்டு கொள்ளாமல் சால்ஜாப்பு செய்கிறது என்றவாறு இந்தியத்தரப்பில் இப்பொழுது கேள்வி எழுவது நியாயம் தானே!

அணு ஆயுத பயங்கரம் இப்பொழுது உலகம் முழுவதையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

நம் பக்கத்து நாடான இந்தியா அணு ஆயுதம் வைத்திருக்கிறது. அதன் அண்டை நாடான பாகிஸ்தானிடமும் அணு குண்டு உண்டு.

சீனாவுக்கும்இந்தியாவுக்கும எல்லைச் சண்டை இன்னும் தீரவில்லை :இரு நாடுகளிடமும் அணு குண்டு தாராளம். இந்தியாவுக்கும், ரஷியாவுக்கும் சிநேகம் இருவரிடமும் அணு குண்டுகள் உண்டு

ஐரோப்பியாவில் பிரிட்டன், பிரான்ஸ் இரண்டுமே அணு வல்லரசுகள். ஆக அமெரிக்காவிடம் தான் அணு குண்டும் அதனை ஏந்திச் செல்லும் ஏவுகணைகளும் உண்டு என்ற மனநிலை இல்லை.

## நாணயக்கயிறு

அணு ஆயுதப் போர் ஒன்றுக்கு வழி வகுத்துவிடக்கூடிய ஆபத்தைத் தவிர்க்க உலகஅமைதியில் அக்கறையுள்ள போப்பாண்டவர் முதற்கொண்டு அனைவருமே குரல் எழுப்பி வருகின்றார்கள். ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கையில் உள்ள நாணயக்கயிறு எப்பொழுது அறுக்கப்படுமோ தெரியவில்லை.

இந்தியாவைப் பாதுகாப்பதற்கு அணு குண்டையும் பாவிப்பேன் என்றவாறு அண்மையில் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் கூறியிருப்பது கவனத்துக்குரியது. அவசியமற்ற விதத்தில் இந்தியத் தலைவர்கள் இப்படியான அச்சுறுத்தல்களை விடுவதில்லையென்பது பிரசித்தம்.

அதேவேளை யுத்தம் வந்தால் அணு குண்டை பாகிஸ்தான் பிரயோகிக்காமல்விடாது என்ற வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அடிக்கடி இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்து வருவது தெரிந்ததே.

சமீபத்தில் இரு நாடுகளுக்குமிடையில் முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்த போது இந்தியா தங்கள் பகுதியில் கால் வைத்திருந்தால் அணு குண்டை பாவித்திருப்போம் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி கூறியிருந்தமை இந்திய வட்டாரங்களால் நகையாடப்பட்டது.

பொறுப்பான ஒரு பதவியிலிருப்பவர் இவ்வாறு சாதாரணமாகக் கருத்து வெளியிடுவது பொறுப்பற்ற செயல் என்பது போல் அண்மையில் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இந்திய இராணுவத் தளபதி பத்மநாபன் கருத்து வெளியிட்டிருந்தார்.

கிணற்றிலிருந்து மண் பானையில் தண்ணீர் எடுப்போர் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் பானை உடைந்து பயனில்லாமல் போகும் என்று பாக். ஜனாதிபதியின் கருத்துக்கு பதிலளித்திருந்தார் பத்மநாபன்.

அவர் அடிக்கடி பூச்சாண்டி காட்டி வருகிறார். அதற்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என்றார் அவர்.

## உலக மக்கள் அடையும் கவலை.

அணுகுண்டுகள் பொறுப்பற்ற தலைவர்களின் கைகளுக்குப் போய்க் கிடைத்துவிடக்கூடாது என்பதே உலக மக்கள் கவலை.

அணு குண்டுகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கு அமெரிக்காவும், ரஷ்யாவும் முன்பு இணங்கியிருந்தன. அதே போல் ஏனைய நாடுகளும் தங்களுக்குள் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் நாடுகளிலுள்ள அணுசக்திக் கேந்திரங்களைப் பற்றிய தகவல்களை பரிமாறிக் கொண்டுள்ளன. 1991 ஆம் ஆண்டு இரு நாடுகளும் செய்து கொண்ட

**ரமேஸ்**

ஒப்பந்தத்தின் படி இந்தப் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டது.

இதே போல் இந்த இரு நாடுகளும் அணு ஆயுதங்களைக் குறைப்பது பற்றியும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வார்களானால் ஆசியாவின் இந்தப் பிரதேசம் அணு ஆயுத ஆக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஒரு முன் முயற்சியாகவிருக்கும்.

நாடுகளுக்கிடையிலுள்ள பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றதோர் நிலைப்பாடு உறுதி செய்யப்படுமானால் அணு குண்டுகளைப் புதிதாக உற்பத்தி செய்வதில் ஊக்கம் குறையும். இருக்கும் குண்டுகளையும் படிப்படியாகக் குறைத்து முற்றாக ஒழிக்க முடியும்.

ஏற்கனவே அணு குண்டினால் பாதிக்கப்பட்டு அதன் விளைவுகளை நேரடியாக அனுபவித்து வரும் ஜப்பான் இந்த விடயத்தில் தீவிரமாக இறங்கினால் உலகத்தை அணு ஆயுத ஆபத்திலிருந்து ஒரு வேளை காப்பாற்ற முடியும். பொருளாதாரத் தடைகளும் அச்சுறுத்தல்களும் எதுவிதப்பயனும் ஏற்படுத்தப்பட மாட்டாதென்பது இந்தியா-பாகிஸ்தான் விடயத்தில் நிரூபணமாகியுள்ளது. (பி)

## இந்து ஆசாரப்படி வழியனுப்பல்

(யாழ்ப்பாணம்)

சபரிமலை ஐயப்பசுவாமி பக்தர்களை இந்துசமய ஆசாரப்படி வழியனுப்பும் வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நண்பகல் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு ஏற்பாட்டில் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. (உ)

## கிட்டு பூங்கா. புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 10ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கச்சேரி-நல்லூர் வீதியில் அமைந்துள்ள கேணல் கிட்டு பூங்காவாயில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அங்கு சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.(உ-6)

## 29 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் நீத்தவர்களின் 29ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு, யாழ். முற்றவெளி நினைவுத்தூபி முன்றலில் நடைபெறவுள்ளது.(உ)

## தரம் 1 மாணவர்களுக்கு உபகரணங்கள்

(கோப்பாய்)

தரம் 1இல் இவ்வாண்டு கல்வி கற்கும் மாணவர்களுக்கான உபகரணத் தொகுதி யுனிசெவ் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் வலயப் பாடசாலைகளுக்கான உபகரணங்களை இன்று காலை யாழ் வலயக்களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-79)


## விளையாட்டுப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்ளும் கரவெட்டிப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கரவெட்டிப் பிரதேச விளையாட்டுப் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டிப்பிரதேச விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (உ-6)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை மரம் நாட்டும் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் எஸ் நடராஜலிங்கம் உரையாற்றுகிறார்.



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 15ஆவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி மங்களவிளக்கேற்றி வைப்பதையும், அருகே கழகச் செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன் வடமராட்சி லயன்ஸ்கழகத் தலைவர் சச்சி தவச்செல்வன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## தாய்லாந்து படைஅதிகாரிகள் இலங்கையில்

(கொழும்பு)

தாய்லாந்து பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரி ஜெனரல் சுலைப் வினோட் லெப்டினன் கேணல் ஆர் பத்து சுசுவை ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்துள்ளனர்.

தியத்தலாவ இராணுவ முகாமில் இராணுவத்தளபதி லெப்டினன் லயனல் பலகல்ல தலைமையில் இவர்களுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

பின்னர் இராணுவத்தளபதி பலகல்ல அளித்த இராப்போசன விருந்திலும் இவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்கள் அனைவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவையும் நேற்று முன்தினம் மாலை சந்தித்து நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர். (உ-8)

## வாயிலார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்டு வரும் அறுபத்திமூன்று நாயன்மார் குருபூசை வரிசையில் வாயிலார் நாயனார் குருபூசை எதிர் வரும் வெள்ளிக்கிழமை கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-10)


இதயத்தால் வாழ்த்துகிறோம்

இனிதே



வாழி

சிவத்தமிழ்ச் செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி

தொழுபக்தர் வாழ்வைநனி துலங்கச் செய்யும்
துர்க்கையவள் பதம் பற்றித் தொண்டு செய்தே
தழுவித்திங் கேதிலர்க்குந் தயவு காட்டுந்
தாயான சிவத்தமிழ்ச் செல்வி யாரே
பழுதற்ற பேச்சாலே பணிக ளாலே
பகரரிய சேவையினைப் பல்லாண் டாற்ற
எழுபத்தெட் டாமகவை எய்தும் வேளை
இதயத்தால் வாழ்த்துகிறோம் இனிதே வாழி

காரைநகர். [C/5618] வியாவில் ஐயனார் தேவஸ்தானம்.

# விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தும் விடுதலைப் புலிகள் பாராட்டத்தக்கவர்கள்

## தமிழக அறிஞர் கவிக்கோ உணர்வு மிகு கருத்து

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டும் அங்கு தமிழுக்காய் உயிரையும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற மானத் தமிழர்களின் முகங்களைத் தரிசிக்க வேண்டும் என்பது நெடுநாளைய அவா.

இந்த ஆசை இன்று தான் நிறைவேறி இருக்கிறது.

யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழக அறிஞர் கவிக்கோ அப்துல் ரகுமானை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று எமது செய்தியாளர் சந்தித்த போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்;

1985 ஆம் ஆண்டில் போர் நடந்து கொண்டிருந்த வேளை, இந்த மக்கள் படும் இன்னல்களையும் கண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில யாழ்ப்பாணம் வரமுயன்றேன்.

அதற்கு அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் தடை போட்டுவிட்டனர்.

இந்தியாவில் உள்ள தேசியப் பத்திரிகைகள் தமிழர்களின் ஈழப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி எழுதுகின்றன.

தவிரவும் பொடாச் சட்டம் ஈழத் தமிழர் குறித்த செய்திகளுக்கு மட்டுமன்றி ஆதரவுக்கும் தடை விதிக்கிறது.

இந்து மதத்தைத் தழுவுகின்ற வாஜ்பாய் அரசு ஈழத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை உணர மறுக்கிறது.

விடுதலை உணர்வு இந்தியாவில் மேலோங்கும் என்ற அச்சம் காரணமாகவே ஈழப் போராட்டத்தை நசுக்க அது முற்படுகிறது.

உரிமைகளை வழங்க பேரினவாதிகள் மறுக்கும் போது வெகுண்டெழுவதும் அவற்றைப் பெறப் போரிடுவதும் சிறுபான்மை இனங்களின் இயல்பே இதில் தவறில்லை.

இந்தப் போராட்டத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்லும் விடுதலைப் புலிகள் பாராட்டத்தக்கவர்கள்.

இவர்களின் வழிநடத்தல் இன்றி விடுதலைப் போர் தொடர்வது சாத்தியமில்லை.

இவர்களின் குறிக்கோள் வெற்றி பெற வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

அமெரிக்கா பிரயோகித்து வரும் அழுத்தம் பேச்சுக்கள் நல்ல முறையில் நாரவழி வகுக்குமா? அல்லது அது சாத்தியமா? என்பது சந்தேகமே.

தமிழர்களின் இன்றைய நிலையை உள்ளது உள்ளவாறு தமிழகத்தில் போய்ச் சொல்ல போடா சட்டம் தடையாக உள்ளது.

ஆனாலும் இவற்றை தமிழக மக்களும் அறிய வைப்பது எனது கடமை.

விடுதலைப் புலிகளின் ஆற்றலும் அரசியல் பலமும் என்னைப் பிரமிக்க வைக்கின்றன.

தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் காப்பாற்ற யாழ்ப்பாணத் தமிழர்களால் மட்டுமே முடியும்.

தமிழகம் அந்தப் பக்குவத்தை இழந்து நெடுங்காலமாகிவிட்டது என்று குறிப்பிட்டார். (உ-43)

## இராசதுரையின் நூல் இன்று வெளியீடு

(தென்மராட்சி)

காவலூர் இராசதுரையின் விளம்பரத்துறை தோற்றம்-வளர்ச்சி- வீச்சு ஆதிக்கம் எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில், வாழ்த்துரையை பேராசிரியர் செ சிவஞானசுந்தரமும் (நந்தி) வெளியீட்டுரையை முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி மா. நடராஜசுந்தரமும், ஆய்வுரைகளை அரசறிவியல் சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கம் மற்றும் முதுநிலை விரிவுரையாளர் திருமதி த. ரவீந்திரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்

(உ-77)

# லயன்ஸ் கழகங்களின் பணி மனநிறைவைத் தருகின்றது

## கலைவிழி புகழாரம்

(தென்மராட்சி நிருபர்)

தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தில் லயன்ஸ் கழகங்கள் பங்கு கொள்வதைப் பார்க்கின்ற பொழுது எனக்கு மிகவும் பெருமிதம் உண்டாகின்றது.

போராடுவதும் வெற்றி காண்பதும் எங்களுடைய பணியல்ல. அதற்கு மேலாக பாதிப்படைந்த மக்களுக்கு அவர்களுடைய பழைய வாழ்க்கையை மீட்டுக்கொடுப்பதும் சரிசமமான சுதந்திரத்தோடும் பாதுகாப்போடும் வாழவைப்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் கடமையாகும்.

யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளரான கலைவிழி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடை பெற்ற திருநெல்வேலி லயன்ஸ்கழகத்தின் அறக்கொடைகள் வழங்கும் வைபவத்தில் பங்குகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்

திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் கலாநிதி க. குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கனடாவைச் சேர்ந்த அறக்கொடையாளர் ஏ. வி. செல்வராஜாவின் நிதியுதவியுடன் வலதுகுறைந்த 10 பேருக்கு முச்சக்கரவண்டில்களும், நல்லை ஆதீனத்துக்கு இரு மின்விசிறிகள், திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்துக்கு பத்து நுளம்புவலைகள், மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் மூவருக்கு விழிவெண்படலங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி தொடர்ந்தும் உரையாற்றும்போது;

லயன்ஸ் கழகங்கள் பணம் படைத்தோருடையவை என்ற என்னுடைய கருத்தினை இந்நிகழ்வுக்கு வந்ததன் மூலம் மாற்றிக்கொண்டுள்ளேன். லயன்ஸ் கழகங்கள் மக்களுடைய துன்பங்களையும் துயரங்களையும் களைவதில் பெரும் பங்களிப்பு செய்வது மனதிற்கு நிறைவைத் தருகின்றது என்றார்.

கழகத் தலைவர் லயன். கலாநிதி க. குணராஜா அங்கு உரை நிகழ்த்தும்போது;

யுத்த அனர்த்தங்களின் போது அழிந்துபோயுள்ள ஒரு சமூகக் கட்டமைப்பை மீள உருவாக்குவது அரசின் கடமையாகும். ஆனால், யுத்த அனர்த்தங்களினால் சமூகமட்டத்தில் ஏற்பட்ட மனக்காயங்களையும், உடல் அவயவங்களின் பாதிப்புகளுக்குரிய ஆறுதலையும், உதவியையும் புரியவேண்டிய கடமை ஓரளவு வசதியாக வாழ்கின்ற சமூக மக்களது கடமையாகும்.

அந்தவகையில், திருநெல்வேலி லயன்ஸ்கழகம் ஒரு பாரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இத்தகைய அறக்கொடைத் திட்டத்தை அமுல் செய்வதற்கு எமக்கு உதவிய அறக்கொடையாளர் செல்வராஜாவின் உதவி மிகவும் பெறுமதி மிக்கதாகும் என்றார்.

(உ-77)

# முஸ்லிம்களின் நிலைப்பாட்டை தெளிவு படுத்துவது எமது கடமை

## ரவூப் ஹக்கீம் பி. பி. ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

முஸ்லிம்களின நிலைப்பாடு சம்பந்தமாக தெளிவாக கூற வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது என்பதை தமிழீழ விடுதலைப்புலிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

நான்காம் சுற்றுப்பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் பி. பி. சிக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு இன்மை பற்றி கருத்துவெளியிட்ட ரவூப் ஹக்கீம்,

முஸ்லிம மக்களின் நிலைப்பாடு சம்பந்தமாக தெளிவாக எடுத்துக் கூற வேண்டிய இக்கட்டான நிலை உருவாகும் போது சிலகருத்து முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும்.

ஆனாலும், இது கடமை என்பதை விடுதலைப்புலிகள் புரிந்துகொள்ள வேண்டும் அது மட்டுமன்றி ஒன்றுபட்ட அமைப்பிலே தமிழர், முஸ்லிம்களின் அதிகாரங்களை எப்படியும் பகிர்ந்து கொள்ளலாம் என்ற விடுதலைப்புலிகளின் கருத்து அவர்களின் தற்போதைய நடவடிக்கைகளின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில், இந்த நிலையில் முஸ்லிம்களின் தலைவரான நான் வாய் திறந்து பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

ஆனாலும், தமிழர் முஸ்லிம்களிடையே பரஸ்பர நம்பிக்கையைக் கட்டிவளர்க்க வேண்டும் என்ற நிலையினை உணர்ந்து கொண்டு மக்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் அவர்களது உணர்வுகளையும் நான் எடுத்து கூறவேண்டிய நிலையில் உள்ளேன்.

தமிழர்களைப் போலவே முஸ்லிம்களும் கௌரவமான முறையில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு வாழ்கின்ற உரிமையை எதிர்பார்க்கிறார்கள் இதனை பேசித் தீர்க்கலாம், என்ற எதிர்பார்ப்புடனே நாம் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டுவருகிறோம்.

அதேவேளை, இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் மூலாதார விடயங்களில் முஸ்லிம்களையும் உள்வாங்கி இந்த பேச்சுவார்த்தையினை நடத்துவது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தலாம் என்ற முடிவிற்கு வந்துள்ளோம்.

இதுசம்பந்தமாக நோர்வே தூதுக்குழுவினருடன் கதைத்துள்ளோம் என்றார் (உ-10)

# தட்டாதெரு சந்திப்பகுதியில் வீடு வீடாகச்சென்று படையினர் விபரம்திரட்டல்

(திருநெல்வேலி)

தட்டாதெரு சந்திக்கு அண்மையில்உள்ள வீடுகளுக்கு சென்று நேற்றுமுன் தினம் படையினர் குடும்பவிபரங்களைத் திரட்டியுள்ளனர்.

காலை 9 00 மணிமுதல் இவ்விபரம் திரட்டலில் ஈடுபட்ட படையினர் குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர் அடையாளஅட்டை இலக்கம் வயது, இறந்தவர்களின் விபரம் என்பனவற்றைத் திரட்டியுள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிவழங்கவே இவ்விபரங்கள் திரட்டப்படுவதாக சம்பந்தப்பட்ட மக்களிடம் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது நாம்மட்டும்தானா? என வினாஎழுப்பியுள்ள இப்பகுதிமக்கள் இந் நடவடிக்கைகுறித்து அதிருப்தியும் சந்தேகமும் வெளியிட்டுள்ளனர். (உ-43)

## குழுக் கூட்டம்

வடகிழக்கு மாகாண திட்ட இணைப்புக் குழுக் கூட்டமானது எதிர்வரும 29 ஆம் திகதி திருகோணமலை மாவட்டச் செயலகப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந்த இணைப்புக்குழுக்கூட்டத்தில புதிய செயற்திட்டங்களை வகுப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

(உ-16,6)

# விசேட பதவி உயர்வுகளை இடை நிறுத்த உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட விசேடபதவி உயர்வுகள் அனைத்தையும் இடைநிறுத்துமாறு பொலிஸ் மா அதிபர் ரி ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

இப்பதவி உயர்வுகள் தொடர்பாக கடந்த சில மாதங்களாகக்கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் முறை கேடுகளின் அடிப்படையிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இப் பதவி உயர்வுகள் குறித்து உரிய முறையில் விசாரணைகளை நடத்துமாறும் பதவி உயர்களில் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் அவர்களது பதவிகள இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# கோப்பாய் வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பு குடம்பிகள் ஆங்காங்கே இனம் காணுகை

(சுதுமலை)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கொக்குவில் கிழக்கு மற்றும் வலி-தென்மேற்குப் பகுதியில் உள்ள மானிப்பாய், கட்டுடைப்பகுதியிலும் டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்பின் குடம்பிகள் இனம்காணப் பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மலேரியா தடை பிரிவின் பூச்சியியல் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக கைவிடப்பட்ட பாத்திரங்கள், தகரங்கள் பேணிகள் போன்றவற்றில் தேங்கிய நீர் மற்றும் மழைநீர் தேங்கிய இடங்களிலும் இவை அவதானிக்கப்பட்டுள்ளன.

எனவே இவற்றை அகற்றாது விடுவதால் அப்பகுதியில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து காய்ச்சல் ஏற்படுவதற்கும் காரணமாகலாம் எனவும் பொதுமக்கள் இவ் விடயத்தில் விழிப்பாக இருப்பதன் மூலம் டெங்கு நுளம்புகள் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-252)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது
குறள்

## வலம்புரி

### ஜே. வி. பியின் எதிர்ப்பு

யாழ். குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கோ, அப்பகுதியில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறுவதற்கோ அனுமதிக்கக் கூடாதென் பதை வலியுறுத்தி இன்று ஜே.வி.பி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது. ஜே.வி பியின் இவ்வார்ப்பாட்டம் சமாதானமுயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கை என்பது வெளிப்படையாக இருப்பினும் ஜே.வி. பியின் உள்ளார்ந்த உணர்வு இலங்கையில தமிழர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவர்களுக்கென்றொரு தாயகம் இல்லைஎன்பதே ஆகும்.

கடந்த இருபது வருடகால யுத்தத்தால் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் ஆயிரக்கணக்கில் உயிரிழந்துள்ளனர். ஏழைச் சிங்கள இளைஞர்கள் தம் வறுமைநிலை காரணமாக இராணுவத்தில் சேர்ந்தனர். அரசு காட்டிய சலுகைகளில் ஆசைகொண்ட சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து உயர் இராணுவ அதிகாரிகளின் இனவாத அழிப்புக் கொள்கைக்கு உதவினர். ஆனால் அவர்களும் அவர்களது குடும்பங்களும் பெரும் பாதிப்படைந்தனர்.

இந்நிலையில், இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும் இனயுத்தத்தை முடிவுகட்ட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு இருதரப்பும் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அதை எதிர்த்து ஜே.வி.பி ஆர்ப்பாட்டங்களை நடத்துவது இந்நாட்டின் இறைமையிலோ அன்றி நாட்டின் எதிர்கால அபிவிருத்தியிலோ ஜே.வி.பிக்கு எந்தக் கரிசனையும் கிடையாதென்பதையே வெளிப்படுத்துகின்றது.

யாழ்குடாநாட்டில்தமிழர்களின் தாயகத்தில் உயர்பாதுகாப்பு என்ற பேரில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கபபட்டுள்ள பிரதேசங்களில் தமிழ் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கக் கூடாதென ஜே.வி.பி ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

அதுமட்டுமன்றி இலவாதத் தீயைக் கக்கும் ஜே.வி.பிக்கு தென்னிலங்கைச்சிங்கள மக்கள்சிஹல உறுமயவுக்குக் கொடுத்த தலையிடியைக் கொடுக்க வேண்டும்,

# மதிநலம் வாய்ந்த மண்டோதரியின் கற்பும் நிறையமைந்த நீர்மையும் போற்றுவதற்குரியன!

பேராசிரியர்
ரா. பி. சேதுப்பிள்ளை

ஆணவனே தெய்வமென்று கருதி ஒழுகிய கற்புடைய மாதருள் மண்டோதரி தலைசிறந்தவளாவாள். தூய வெண்ணீறு துதைந்த மேனியும், சிவனடி மறவாத சிந்தையும் வாய்ந்த அம்மங்கை செந்நெறிவழுவாது வாழ்ந்து வந்தாள். தன் தலைவன் இராவணன் விதிவலியால் மதி மயங்கி, நஞ்சு தோய்ந்த அமுதனைய சீதையை நயந்தான் என்றறிந்த போது மதிநலம் வாய்ந்த இம்மாது நடுங்கினாள் மாதர் நெடும் புலவியினும் வணங்காத பெருமை வாய்ந்த மன்னவன் சிறியனாய் எளியனாய்ச் சீதையின் முன்னே இருந்து இறைஞ்சிய தன்மையை அறிந்து ஏங்கினாள். சீதையால் நேர்ந்த நெடும் போரில் மகன் மேகநாதன் இறந்தழிந்த செயல் கேட்டுச் சிந்தை நைந்த அந்நங்கை,

'தலையின் மேற் சுமந்த கையன்
தழலின் மேல் மிதிக்கின்றாள் போல்
நிலையின் மேல் மிதிக்குந்தாளன்
நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின் மேல் குறித்த வேடன்
கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின் மேல் மயில் வீழ்ந்தென்ன
மைந்தன் மேல் மறுகி வீழ்ந்தாள்'

மையறு மனத்தளாய மண்டோதரி, தலையின் மேல் சுமந்த கையளாய், தழலின் மேல்மிதிப்பவள் போல் அஞ்சி நடந்து சென்று, மலை போல் கிடந்த மைந்தன் மீது, வேடனது அம்பால் அடிபட்டமயில் போல் வீழ்ந்தாள், மயங்கினாள். புலம்பினாள் 'தன்மைந்தனது குழவிப் பருவத்தை நினைந்து குமுறிக் குமுறி நெஞ்சம்குழைந்தாள்' ஐயனே வளர்மதிபோன்று நீ வளர்ந்து வருங்காலத்தில் உன் சிலையினால் அரியை வெல்லக் கண்டு வியந்தேனே! இப்போது உன் தலையிலா உடலைக் கண்டு கலங்கப் பாவியேன் என்ன தீவினை செய்தேனோ? நிலையற்ற இவ்வாழ்வை விரும்பி இன்னும் உயிர்தாங்கியிருப்பேனோ? ஐயனே! அழகனே என் அரும்பெறல் அமிழ்தமே! உலக மூன்றினும் ஒப்பற்ற வீரனே! நின்மலர் முகம் காணாது இம்மண்ணுலகில் வாழ்வேனோ? என்று பலவாறாகப் பன்னிப் பதறி அழுதாள். அந் நிலையில் மதிநலம் சான்ற அம்மங்கை பின் நிகழவிருந்த பெருந்தீமையை நினைந்தாள். நெஞ்சம் உருகினாள் தேவரினும மூவரினும் வலியனாய இலங்கை வேந்தனும் இராமன் அம்பால் இறக்கப் போகின்றானே என்று எண்ணினாள். எண்ணிய கருத்தைச் சொல்ல நாவெழாது தரை மீது கிடந்த தன்மைந்தனது உடலை நோக்கி "அந்தோ இலங்கை வேந்தனும் நாளை இத்தகையனன்றோ?'' என்று இயம்பும் முறை அம்மங்கையின் கற்பின் பெருமையை உணர்த்துகின்றது.

### அமுதாற் செய்த நஞ்சு

பஞ் செரியுற்ற தென்ன
அரக்கர்தம் பரவையெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளிந்ததே மீண்டதில்லை
அஞ்சினேன் அஞ்சினேன் இச்
சீதையென்று அமுதாற் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளை இத்தகையன் அன்றோ?''

என்பது மண்டோதரியின் வாய்மொழி. கண்டோர் கருத்தைக் கவரும் பேரழகு வாய்ந்த சீதைகாமுற்றஆடவரை அழிக்கும் கற்பு வாய்ந்தவளாதலின் அத்திருமகளை அமுதாற் செய்தநஞ்சு' என்று அரக்கமாதேவி கருதினாள் சீதையின் அழகெனும் அமுதை மாந்திய அரசன் அவ்வழகினுள் அமைந்த கற்பெனும் நஞ்சால் அழிவது திண்ணம என்றறிந்த மண்டோதரி அக்கருத்தை வெளியிடும் மொழிகளில் சோகம் பொங்கித் ததும்புகிறது; அப்பால் போர்க்களத்தில் ஆவியிழந்த தலைவன் மேனியைக் கண்டு.

"பிழையோ விழுந்ததுவும் முடித்தலையோ
படித்தலைய முகங் காட்டாயோ
என்னேயோ என்னேயோ இராவணனார்
முடிந்த பரிசு இதுவோ பாவம்.''

என்று மண்டோதரி இரங்கிக் கூறும் பொழுது, உயிரிழந்தகாதலனை "இராவணனார்'' என்று சிறப்பித்துரைக்கும் செம்மை அம்மங்கையின் நிறையமைந்த நீர்மையை உணர்த்துகிறது.

### மண்டோதரியின் பெருமை

இத்தகைய மண்டோதரி, நாயகனது புண்ணுற்ற மேனியைக் கண்டு புலம்பியபோது, உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்றாள்; அந் நிலையில் உதித்த ஞானத்தால் இலங்கைப் போர் முனையில் கால் தரை தோய நின்று கண்ணுக்கும் எளியனாய வீரன், பாலாழியிற் பள்ளி கொள்ளும் பரமனே, என்று அறிந்தாள்; "ஆரா அமுதாய் அலை கடலிற் கண் வளரும் நாராயணன் என்றிருப்பேன் இராமனை நான்'' என்றுமெய்ம்மையுணர்ந்து மங்கை ஆவி துறந்தாள். தலையாய கற்பு நெறி வழுவாது தலைவனுடன் சென்ற மண்டோதரி, இறைவன் இணையடி சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வெய்தினாள். இங்ஙனம் ஈசனிடம் இடையறாப் பேரன்பு வாய்ந்து இன்பப் பேறெய்திய மண்டோதரியின் பெருமையை,

"ஏர் தரும் ஏழுலகேத்த
எவ்வுருவும் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை
அழகமர் மண்டோ
தரிக்குப்
பேரருள் இன்பமளித்த
பெருந்துறை மேய
பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக்
கூவாய்'2

என்று மணிவாசகப் பெருமான் திருவாசகத்திற் போற்றிப் புகழ்ந்தனர். வரத்தாலும், வலிமையாலும் சிறந்து விளங்கிய இராவணன் மனைவியாய் அமர்ந்து, தேவர் கோனையும் வென்று சிறமீட்ட மேகநாதனின் அன்னையாகத் திகழ்ந்து, சிவனடி மறவாச் செம்மையிலே தலைநின்று, கணவன் இறந்த நிலையில் உயிரிழந்து, ஞானத்தால் வீடு பெற்ற நங்கையைப் பஞ்ச கன்னியருள் ஒரு கன்னியாக வைத்துப் பண்புடையோர் பாராட்டுகின்றார்கள்.

## நேர்முகப் பரீட்சை

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பமாகவுள்ள தையல், மனையியல் பயிற்சி நெறிக்குவிண்ணப்பித்தவர்களிற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9 30 மணிக்கு காரை தெற்கு கிராமசேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ46)

## உதவி
### விரிவுரையாளர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன வருகை விரிவுரையாளர்களின் 2000 ஆண்டுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது வரை இக் கொடுப்பனவைப் பெறத் தவறிய வருகை விரிவுரையாளர்கள் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். (உ)

## இளைஞர்குழுக்கள் மோதல்
## ஒருவருக்கு கழுத்தில்வெட்டு

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் வேளை நாவலர் வீதியில் கூடிய இளைஞர்கள் சிலர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும், முரண்பாடு முற்றிய நிலையில் இவர்கள் கத்தி வெட்டில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தச் சம்பவத்தில் கழுத்தில் வெட்டுக்காயத்திற்குள்ளான நாவலர் வீதியைச் சேர்ந்த ஆ. விநோத் (வயது 19) யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## பொங்கல் விழாவில்
## பண்டையவிளையாட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும 26 ஆம் திகதி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு ஏற்பாட்டில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பொங்கல் விழாவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவிருக்கின்றன.

கிளித்தட்டு, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் சறுக்கு மரம் ஆகிய இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் விளையாட்டுவீரர்கள் தங்கள் விண்ணப்பங்களை இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக க. முகுந்தன் விளையாட்டு உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-16,6)

## உதைபந்தாட்ட
## நடுவர்கள்
### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள உதை பந்தாட்ட மத்தியஸ்தர்கள் தொடர்பான விபரங்களை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் திரட்டி வருகின்றது

இதன் அடிப்படையில, யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பி.ப 5. மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ)

## தினசரி தியானம்

### தூய்மையான அன்புகொள்

அழிவற்ற சாந்தியும், ஆனந்தமும் நிறைந்த இறைவனின் சாம்ராஜ்யத்திற்கு அல்லது உண்மைக்கு வழி அன்பேயாகும். சிருஷ்டியின் ஜீவாதாரக் கொள்கை இது தான். மீரா, துகாராம், கௌரங்கர் ஆகியவர்களை இறைவனை நோக்கி அழைத்ததும் இதுவேதான்.

எனவே, தூய்மையான, தன்னலமற்ற அன்பை விருத்தி செய், தூய்மையான அன்பு ஓர் அரிய வஸ்து. படிப்படியாக அதைப்பழக்கம் செய்து கொள். உன்னிடம் உள்ள வெறுப்பு, துவேஷம் முதலிய தீய குணங்கள் மறைந்துவிடும். அன்பு மனத்தைச் சுத்தப்படுத்தும் அரிய மருந்து. அன்பில் வாழ், மேலான ஆனந்தத்தை அனுபவிப்பாய்.

சுவாமி சிவானந்தர்

## ராம்கோ சீமெந்து விலைகுறைப்பு

(யாழ்ப்பாணம்)

"ராம்கோ" சீமெந்து ஈஸ்வர பகவான் விற்பனை நிலையத்தில் 410 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ராம்கோ சீமெந்து அண்மைக் காலமாக 425ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது யாழ்.அரசஅதிபரின் பங்களிப்புக் கமையவே இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப் பட்டதுடன் மாதாந்தம் 600 ஆயிரம் மெற்றிக்தொன் சீமெந்து கப்பலில் எடுத்து வரப் படுவதாக நிர்வாக முகாமை யாளர் பீவரதராஜசங்கம் கூறினார்.

(த-16)

### யப்பானிய அமைச்...

ஜனாதிபதியினதும் நிலைப்பாடு என்பன குறித்து விரிவாகப் பேசப்பட்டது.இலங்கை மக்களின் அன்றாட அடிப்படை வாழ்க்கைத் தர வசதிகளை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு யப்பானிய அரசு உதவிகளை வழங்குமென்று, இச் சந்திப்பின் போது வெளி நாட்டமைச்சர் ஜனாதிபதிக்கு உறுதியளித்துள்ளார்.

இதேவேளை யப்பானிய வெளி நாட்டமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ ஆகியோ ரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### மீளக்குடியமர்...

குடியமர்வதற்கு அனுமதிப்பதன் மூலம், மக்களின் இயல்பு வாழ்க்கை மீளக் கட்டியெழுப்ப அதிஉயர் பாதுகாப்பு வலயத் தடை அகற்றப்பட்டு, இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பதில் விடுதலைப் புலிகள் உறுதியான கருத்துக் களை முன்வைத்துப் பேசினர்.

இப் பேச்சுக்களின் விபரங்கள் குறித்து கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவிக் கையில்:-

படைத்தரப்பின் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங் களில் வாழ்ந்து, அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்தக் கிராமங்களில் மீளக் குடியமர்த்துவது தொடர் பில் அரசாங்கத்துடன் ஒரு இணக் கமான தீர்வு காணப்பட்டுள்ளது.

அதிஉயர் பாதுகாப்பு வலயம தொடர்பாக அரசாங்கம் மீள் பரிசீலனை செய்து, இராணுவப பாதுகாப்பு எல்லைகளை மாற்றியமைத்து, அங்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்து, மீள் குடியமர்த்தல் வேலைத் திட்டமென்றை உருவாக்கி, அதனை வெளிநாட்டு இராணுவ நிபுணர்கள் ஆராய்ந்து, அதனையே அமுல் செய்வதென்றும் அரசாங்கத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மக்களின் மீள் குடியமர்வு ஒழுங்காக இடம் பெறவில்லையானால், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று அரசுதரப்புக்கு வலியுறுத் தப்பட்டுள்ளது.இராணுவத் தளபதி லயனல் பலகல்ல விடுதலைப் புலிகள் ஆய்தங்க ளைக் கீழேபோடவேண்டுமென்று கோருவது யதார்த்தத் திற்கு புறம்பானது. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இப்போது ஒரு போதும் கீழே போடமாட்டார்கள்.

தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் தேவை. சமாதானத் தீர்வு எட்டப் பட்டு இயல்பு வாழ்க்கை ஏற்பட டாலும் கூட தமிழ் மக்களின் பாது காப்பிற்கு ஆயுதங்கள் தேவை

மக்களே விடுதலைப் புலிக ளுக்கு ஆயுதங்களைக் கொடுத் திருக்கிறார்கள். ஆயுதங்கள் மக்களுடையது. அதனைப் பயன்படுத்துவோரே விடுதலைப் புலிகள் என்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

(இ)

### மிதி வெடியில் குடும்பஸ்தர் காயம

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவைத் துப்புரவு செய்யும் பணியை மேற்கொண் டிருந்த போது மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

அச்சம்பவத்தின போது சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த எஸ். பொன்னம்பலம் (வயது 51) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவர். (இ-6)

### அரசு-புலிகள்...

இதேவேளை அரசு-புலிகளுக்கு இடையில் இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின் போது பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் சோதனைக் குள்ளாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## புலிகளின் அரசியல்பணிமனை புங்குடுதீவில் திறந்துவைப்பு

(புங்குடுதீவு)

விடுதலைப் புலிகளின் புங்குடு தீவுப் பிரதேசத்திற்கான அரசி யல்துறைச் செயலகம், நேற்று திறந்து வைக்கப்பட்டது.

முற்பகல் 10மணியளவில் புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பொது ஈகச்சுடரினை மாவீரர்களின் பெற்றோர்களான இ.நல்லையா, சி.செல்வராசா, எஸ்.கமல்ராணி, மற்றும புங்குடுதீவு பிரதேசப் பொறுப்பாளர் கானகன், கிராம உத்தியோகத்தர் றமேஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை நெடுந் தீவு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைக்க அரசியல்துறை செயல கத்தின் பெயர்பலகையை தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அலுவலகத்தை, கலைப்பண பாட்டுக்கழக தெருவழி நாடக ஆசிரியர் எஸ். பாலா நாடாவை வெட்டிதிறந்து வைத்தார். (இ)

### புலிகள்...

பிரதிநிதிக்கு விளக்கிக் கூறினார்.

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தொகை, அப் பகுதியிலிருந்த குடியிருப் புக்களின் எண்ணிக்கை, வழி பாட்டுக்கு தடை விதிக்கப் பட்டுள்ள வணக்க தலங்களின் எண்ணிக்கை, மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்னிக்கை, மற்றும் முடக்கப்பட்டுள்ள விவசாய மற்றும் மீன்பிடி பிரதேசங்களின் விஸ்தீரணம் போன்ற விபரங்கள் புள்ளிவிபர ரீதியாக எடுத்துக்காட்டப்பட்டன.

மேலும் உயர் பாதுகாப்பு வலயமல்லாத பகுதிகளில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் போக்குவரத்திற்குத் தடை செய் யப்பட்டுள்ள வீதிகள் போன்ற விபரங்களும் சுட்டிக் காட்டப் பட்டன.

அதேவேளை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள மண்டைதீவுப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர முடியு மாயின ஏனைய உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் ஏன் மக்கள் குடியிருக்க அனுமதி மறுக்கப்படுகிறது. என்றும் விடுதலைப் புலிகள் இச்சந்திப் பின் போது கேள்வி எழுப்பினர்.

(த)

### புலிகள் தனிநாடு...

ஆபத்து ஏற்படுகிறதோ அப்போ தெல்லாம் நாட்டைப் பாது காக்கும் பணியில் பிக்குமார் சங்கம் முன்னின்று உழைத்து வருவதை யாரும் மறந்து விட முடியாது நாட்டைப் பாதுகாக்கும் பணியில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என பிக்குமார் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

(த)

### பருத்தித்துறை...

ஆனால் நேற்றைய தினம் வழமைக்கு மாறாக துறைமுகப் பகுதிக்குள் சங்கத்தைச் சேராத மூன்று லொறிகள் நுழைந்து கப்பலில் இருந்து இறக்கப்பட்ட சீமெந்தினை ஏற்றிச் சென்றன.

இந் நடவடிக்கையைக் கண்டித்தே மறியல் போராட்டம் இடம்பெற்றது.

இத்தகைய அத்துமீறல் நடவ டிக்கைக்கு தீர்வு காணப்படா விடின இன்றும் மறியல் போராட்டம் தொடருமென்று பாரவூர்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்திச் சங்கத்தவர்களின் போராட்டத்திற்கு துறைமுக இறக்குபவர் சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன தமது ஆதரவைத் தெரிவித் துள்ளன.

இதேவேளை சீமெந்தை ஏற்றிக்கொண்டு வந்த தனியார் லொறிகள் மூன்றும், பருத்தித் துறை டிப்போவுக்கு அண்மையில வைத்து கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டதாக பருத்தித் துறைப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-52)

### உயர் பாதுகாப்பு...

பததிரிகையாளர் மாநாட்டிலேயே அவா இந்தத் தகவலை வெளியிட டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் மீள் குடியமரும் பிரதே சங்களில் கண்ணிவெடியகற்றல் மற்றும் குடியிருப்பதற்கான வசதிகளைக் செய்து கொடுப்ப தற்கான கால வரையறை நிர்ண யிக்கப்படவுள்ளதும் உயர் பாது காப்பு வலயப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்க்குடியமர்த்துவது தொடர்பில் நியாயமான முறையில் நாம் ஆராய்ந்துள்ளோம் என்றும் அமைசசர் கூறினார். (த)

யாழ்.குடாநாட்டு லொறி உரிமையாளர்களுக்கான

அறிவித்தல்

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து சீமெந்து இறங்கிக் கொண்டிருக்கின்றது. உங்கள் லொறிகளுக்கு யாழ். குடாநாட்டிற்குள் விநியோகம் செய்வதற்கு பக்கற் ஒன்றுக்கு 10/=படி போக்குவரத்துக் கூலியாக வழங்கப்படும்.

ஏற்றவிரும்புபவர்கள் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்

ஈஸ்வரபகவான் & கம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P :- 021 - 2222350
[C/5609]

ராஜா
யாழ்ப்பாணம்
01.01.2003 முதல்
முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
சுந்தரா ரவல்ஸ்
10.30, 2.30, 6.30
(C/5524)

ராம்கோ சீமெந்து

இலங்கையில் மட்டுமா இல்லை

இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவின் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

RAMCO

முக்கிய குறிப்பு:- யாழ்.அரசாங்க அதிபர் திரு.செ.பத்மநாதன் அவர்களின் ஒத்துழைப்பினால் சீமெந்தின் விலையை பருத்தித்துறைத் துறைமுகத்தில் 400/=வுக்கு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

RAMCO

யாழ்.குடாநாட்டில் 410/=க்கு விநியோகம் செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்

கூட்டுறவுச்சங்க லொறிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் பருத்தித்துறை இறங்குதுறையில் சீமெந்து வழங்கப்படும

வர்த்தகர்கள் தமது லொறிகள் மூலமாக ஏற்ற விரும்பின் தமது லொறிகளை எமது நிறுவனத்தில் பதிவு செய்து சீமெந்தை ஏற்றலாம்.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்

ஈஸ்வரபகவான் & கம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021 - 2222350

[C/5610]

முடிவில்லா இன்பத்தில் மூழ்கி திளைத்திடும்
எம் அன்புத் தெய்வத்தின்

5வது ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 30 ~ 07 ~ 1951

கண் நெகிழ 04 ~ 01 ~ 1998

திருமதி கமலபாரதி சரவணமுத்து
திதி: 08 - 01 - 2003

குடும்ப காவல் தெய்வம் அணைந்து 5ம் ஆண்டு போனாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைந்து தியான சுடரில் ஒளி கிடைக்க பிரார்த்தனை செய்கிறோம்.

ஓம் சாந்தி பாபா பாபா

18, செம்மணி வீதி,
நல்லூர்.

பிரம்ம குமாரர்

(6436)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.